தத்துவபோதினி.

பு. உ.] சென்னைப்பட்டணம் ௧௮௬௫ௗ ஆகஸ்டுமீ ௭௨. [இல. ௪.

ஏகமேவாத்விதீயம், ஸத்யம்ஜ்ஞானமனந்தம்ப்ரஹ்ம, ஶாந்திஸ்ஸ்வாதந்த்ர்யம், தத்ப்ரா
பநாயம்,யஸ்ய த்விஜ-ப்ரத்யாஹாரஸ்ஸர்வதி, கர்மதோதக்ஷ-ஸ்வமேவாபிபதி.

ஸத்யமேவஜயதே நாந்ருதம்.

அட்டவணை.

விஷயங்கள்.

	பக்கம்.		பக்கம்.
௧. கடவுள்துதி	௮௧—௧0௪	௭. உபநிஷத்து	௯௪
௨. விளம்பரம்	௮௩	௮. மநுநூல்	௯௬
௩. தத்துவபோதினி	௮௩	௯. நிருபங்கள்	௯௭
௪. பெண்களுக்குக்கல்வி	௮௬	௧0. விளம்பரங்கள்	௧0௩
௫. ருக்குவேதசம்ஹிதை	௮௮	௧௧. சந்தாதாரர்அட்டவணை	௧0௩
௬. பகவத்கீதை	௯௩	௧௨. பழமொழிகள்	௧0௩

சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

கடவுள்துதி.

இராகம்-சங்கராபரணம்—ரூபகதாளம்.

பல்லவி.

ஸத்யம்ஜ்ஞானமனந்தம் - ப்ரஹ்ம - ஶாந்தம்ஶிவமத்வைதம்.

அநுபல்லவி.

நித்யம்விஶுத்தம்ஸர்வ - கதம்ஸர்வஸாக்ஷம்
சைதன்யநாய - வாங்மநியாநம்..................(ஸத்யம்.)

சரணங்கள்.

௧. ஏகோதேவஸ்ஸர்வ - பூதேஷுகூடஃ
ஸர்வவ்யாபீஸர்வ - பூதாந்தராத்மா
கர்மாத்யக்ஷஸ்ஸர்வ - பூதாதிவாஸஃ
ஸாக்ஷீசேதாகே - வலோநிர்குணஶ்ச......(ஸத்யம்.)

௨. 𑌅𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑍋𑌜 - 𑌵𑌨𑍋𑌗𑍍𑌰𑌹𑍀𑌤𑌾
𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌯𑌚𑌕𑍍𑌷𑍁𑌸𑍍𑌸 - 𑌶𑍃𑌣𑍋𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌣𑌃
𑌸𑌵𑍇𑌤𑍍𑌤𑌿𑌵𑍇𑌦𑍍𑌯𑌂𑌨 - 𑌚𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌿𑌵𑍇𑌤𑍍𑌤𑌾
𑌤𑌮𑌾𑌹𑍁𑌰𑌗𑍍𑌰𑍍𑌯𑌂𑌪𑍁 - 𑌰𑍁𑌷𑌂𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌂......(𑌸𑌤𑍍𑌯𑌂.)

௩. 𑌤𑍇𑌧𑍍𑌯𑌾𑌨𑌯𑍋𑌗𑌾𑌨𑍁 - 𑌗𑌤𑌾𑌅𑌪𑌶𑍍𑌯𑌨𑍍
𑌦𑍇𑌵𑌾𑌤𑍍𑌮𑌶𑌕𑍍𑌤𑌿𑌂𑌸𑍍𑌵 - 𑌗𑍁𑌣𑍈𑌰𑍍𑌨𑌿𑌗𑍂𑌢𑌾𑌂
𑌯𑌃𑌕𑌾𑌰𑌣𑌾𑌨𑌿𑌨𑌿 - 𑌖𑌿𑌲𑌾𑌨𑌿𑌤𑌾𑌨𑌿
𑌕𑌾𑌲𑌾𑌤𑍍𑌮𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 - 𑌨𑍍𑌯𑌧𑌿𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌯𑍇𑌕𑌃........(𑌸𑌤𑍍𑌯𑌂.)

பொருள்.

பல்லவி.

மெய்யறிவநந்தக்கடவுளே சாந்தம்நலமின்பம்.

(இது தைத்தரீய உபநிஷத்து வாக்கியம்.)

அனுபல்லவி.

நித்தியம், விபுசுரூபி, எங்குமுள்ளது, வெகுசூக்ஷ்மமானது, மிகவும்தீனர்களுக்கு உயர்ந்தபதமும் அது.

(இதில் முதல்பாதி முண்டகோபநிஷத்து வாக்கியம்.)

சரணங்கள்.

க. ஒப்பற்றதேவன், சகலபூதங்களிலும் மறைந்து உறைவோன், எங்கும்பரவியவன், எல்லாபூதங்களுக்குமுயிர், தொழிலுக்கதிகாரி, பூதங்களைப் பாலிப்போன், அனைத்தையுங்காண்போன், ஞானசுவரூபி, முற்றும் உடலென்பதற்றவன்.

உ. காலின்றிநடப்பவன், கையின்றிச்செய்பவன், கண்ணின்றிக்காண்பவன், காதின்றிக்கேட்பவன், அறியத்தக்கனவெல்லாம் அவனறிவான், அவனையறியவோருவனுமில்லை. வேறுவிதமாயவனைக் கூறிமுடியாமல், ஆதிமஹாபுருஷனென்றழைத்தார்தள்.

ங. தியானத்தையும்யோகத்தையு அநுசரித்தவர் காலாத்மாவுடன் பொருந்திய சகலகாரணங்களுக்கும் இறைவனும், தன்குணங்களால் நன்ருய் மூடப்பட்டும், இருக்கும் தேவாத்ம சக்தியைக்கண்டார்கள்.

(இந்தச் சரணங்களெல்லாம் சுவேதாசுவதர உபநிஷத்துவாககியங்கள்.)

விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் ஏஜண்டாகிய, கா. தெய்வசிகாமணி முதலியாருக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்தி லுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.......................க - அ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். உ - 0 - 0

பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்...........................க - கஉ - 0

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ளவேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத்தொடங்குவோர் வருஷத்திய சந்தாவும் கொடுக்கவேண்டும்.

வெளியிலிருந்துசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனால், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதர்காக, ரூபாய் ஒன்றுக்கு- ஒரு அணா வீதம் வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிகையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாறும்போது அந்தவிவரத்தைத் தயைசெய்து ஏஜண்டுக்குத் தெரிவிக்க வேண்டியது.

தத்துவபோதினி.

சோதரர்களே! புதிதாய் ஒருவிஷயத்தைக்குறித்து இன்றுசிலபிரஸ்தாபங்கள் செய்யவேண்டி யிருக்கிறபடியினால் கடந்தபத்திரிகையிற்கூறிய விஷயத்தை வருகிற பத்திரிகையில் தொடர்ந்துவிசாரிப்போம்.

எங்கள்சமாஜம் ஏற்பட்டு பதினெட்டுமாதங்களாகிலும் நமதுதேசத்தி லுள்ள பலவகுப்புகளில் ஒன்றைச் சிறப்பித்தாவது மற்றொன்றை யிகழ்ந்தாவது அக்கிரமமாயும் வீண்துவேஷத்துக்கு ஏதுவாயும் உள்ளவிஷயங்களைக்குறித்து எங்கள் பத்திரிகையில் சர்ச்சிக்க மாட்டோமென்று பிரதிக்கியைசெய்து கொண்டதாய் நாங்கள்துவக்கத்திலே உறுதிமொழிகூறி யிருக்கிறோமல்லவா? சகலவிதிகளுக்கும் விலக்குகளிருப்பதுபோல நாங்கள் செய்துகொண்டசாமான்னிய பிரதிக்கியையைக் கடக்கும்படி நேரிடுவதற்காக நாங்கள் உண்மையாய் வருத்தப்படுகிறோம். ஒருவருக்கும் ஹிம்சைசெய்கிறதில்லையென்னும் பிரதிக்கியை யுடையவனுக்கே தேகத்தில் ஒருராஜரணம் காணுமாகில் அவன் ஆத்மசம்ரக்ஷணார்த்தம்அரை மனதுடனாவது அதைக்குத்திக் கிளறிப் பலவிதஹிம்சைகளுக்கும் உட்பட்டு அந்த ரணத்தை ஆற்றமுயல்வது மனுஷியசுவபாவமாகவிருக்கிறது. அத்தருணத்தில் அவன் தகுந்த பிரயத்தனங்கள் செய்யாவிடில் அவனுக்கு ஆத்மஹத்திதோஷம் சம்பவிக்குமென அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். ஆகையால்நாங்கள் மேற்படிபிரதிக்கியையைக்கடக்கும்படிநிர்ப்பந்தித்தசத்புருஷர்கள் அனுசரித்தமார்க்கங்களையும் அவற்றிற்குப் பிரதியாகநாங்கள் அரைமனதுடன் அவலம்பிக்கும்மார்க்கங்களையும், ஒன்றுடனொன்று ஒப்பிட்டுசாந்தமாய் சித்தாந்தஞ்செய்யப்புகுவோர் எங்கள்மீது யாதொரு குற்றமும் ஆரோபிக்கமாட்டார்களென்பதில் தினையளவும் சந்தேகமில்லை.

இதுவரை நம்மவரனுஷ்டித்துவரும்ஆசாரங்களில் சிலபழுதானவையென்று எங்கட்கு விளங்கினமையால் அவற்றைசா

த்தியமானவரையில் படிப்படியாய் நிவர்த்திக்கவேண்டுமென்னுங் கருத்துடன் எங்கள் சமாஜம் ஏற்பட்டது. இவ்வாறு நாங்களடைந்த கொள்கை பழுதற்றதென்றாவது, அதைசாதிக்க நாங்களே சமர்த்தர்களென்றாவது, நாங்கள் நிச்சயித்துக்கொள்ளாமல் எங்களுக்குத் தோன்றியவற்றில் சில முக்கியஅம்சங்களைக் குறிப்பிட்டுப்பத்திரிகாரூபமாய் அவற்றைஎங்களைக் காட்டிலும் அதிகஞானமும் அனுபவமும் பெற்றிருந்த பலருடைய அபிப்பிராயநிமித்தம் அனுப்பியிருந்தோம். இவ்வாறு எங்களால் அபிப்பிராயம் கேட்கப்பட்டவர்களில் சிலர்மௌனமாயும், சிலர் ஆக்ஷேபித்து பதில்எழுதியும், இருந்தபோதிலும் பலர்எங்கள் கொள்கையைக் கொண்டாடியதுமன்றி அவர்களிற்சிலர் அன்புகூர்ந்து நாங்கள் இன்னின்னமார்க்கங்களை யவலம்பித்தால் கடவுள்விரைவில்பயனளிப்பாரெனஎச்சரித்ததைநாங்கள் உண்மையான நன்றியறிவுடன் வெளியிடுகிறோம். அதுமுதல் நாளதுவரையில் நாங்கள்பிரேரேபித்தவிதிகளில் காலதேச வர்த்தமானங்களை யனுசரித்து உசிதமானவும், சாத்தியமானவும், வரையில் நாங்கள்மாத்திரம் அனுஷ்டிக்கமுயன்றுகொண்டும், ஆந்தரியமான விசுவாசத்துடன் எங்கள்கொள்கையை விரும்புவோருக்கு உண்மையை விளக்கிக் கொண்டும் இருந்தோமேயன்றி அயலார் கொள்கைகளையாவது ஆசாரங்களையாவதுகுறித்து பிறர்மனம் நோவும்படி யாதொரு பிரஸ்தாபமும் நாங்கள்செய்யவில்லையென்பதற்கு இதுவரையில்நாங்கள்பிரசுரப்படுத்தியபத்திரிகைகளேசாக்ஷியாகும். இவ்வாறு இருக்கக்கும்பகோணத்திலுள்ள பலபண்டிதர்கள்சேர்ந்து எங்கள்கொள்கைகளில் துரபிமானமுள்ளவர்மாத்திரம் ஆக்ஷேபிக்கத்தக்க வற்றையும், ஒருவரும் ஆக்ஷேபிக்கத் தகாதனவற்றையும் ஒரேமாதிரியாகப் பாவித்துத் தூஷித்து, எங்களையும் பற்கூசாமல்நிந்தித்து, வேதசமாஜகண்டனமென ஒருசிறிய சஞ்சிகையைப் பிரசுரப்படுத்தி யிருக்கிறார்களென்பது அனைவர்க்கும் தெரிந்திருக்கும். எங்களைத்திட்டுவதற்கும் எங்கட்குப் புத்திசொல்வதற்கும் அவ்வன்புள்ளபண்டிதர்கள்சர்வசுவதந்திரர்களென்பதை நாங்கள்ஆக்ஷேபிக்கவில்லை. ஆகிலும் அவர்கள் அபாரசாமர்த்தியத்தைக்கைக்கொண்டு உண்மையை மறைத்து இன்மைக்கு ஒருரூபமேற்படுத்திப்பார்ப்போரெல்லாம் பிரமிக்கும்படிச்செய்துவிட்ட படியால், அதற்கு ஒரு விடையெழுதவேண்டியதுஆவசியகமாயிற்று. மிகுந்தஞானமும் சக்தியுமுடையநம்மபண்டிதர்களேசத்கக்ஷியைப்பிடித்துவாதிக்கும்பக்ஷத்தில் எங்கள்கோரிக்கைவெகுவிரைவில் கைக்கூடிவருமாகிலும்அவர்கள்எந்தஏதுவைப்பற்றியோதுஷ்கக்ஷியாடுவதில் உச்சாகங்கொண்டிருக்கிறபடியால்விதியின்றி எங்களுக்குரியசக்திசாமக்கிரி லோபங்களுடன் ஒருவிடை யெழுதும்படி நேரிட்டது. நம்மபண்டிதர்கள் எங்கள் பிரதிக்கியைக ளனைத்தையும்நிந்தித்து ஒரேசஞ்சிகையாக அச்சிட்டபோதிலும், அவற்றின் சுவரூபங்களை விளக்க எங்கள்சக்திக்கி யைந்தவாறு பலவிண்ணப்பங்களை யெழுதிப் பிரசுரப்படுத்த நிச்சயித்தோம். அவற்றுள்முதல் விண்ணப்பம் பிரகிருதத்தில் நம்மன்பர்களுடைய சோதனைக்குச் சித்தமாயிருக்கிறது. இந்த முதல்விண்ணப்பத்தில் அர்ச்சை அல்லது விக்கிரஹ ஆராதனத்தின் சுவரூபமும், அதற்குச்சாதகமாயும் பாதகமாயுமுள்ள பிரமாணங்களும், அந்தப் பிரமாணங்களின் கவுரவ தார தம்மியங்களும், அர்ச்சையினால் விளையும் பயன்களும் இன்னதன்மை யானவையென்று கூடியவரையில் தெளிவாய் நிரூபிக்கப் பட்டிருக்கின்றன. எங்களைநிந்தித்த பண்டிதர்களைப்போல நாங்களும் வியக்தி தூஷணத்தில் பிரவேசிக்க எங்களுக்கு இஷ்டமுமில்லை, இசையவுமில்லையாகையால், கேவலம் விஷயவிசாரத்துடன் திருப்தியடைந்திருக்கிறோம். நாங்கள் விசாரிக்கத்தொடங்கிய விஷயத்தின் சுவபாவத்தால் அதில்வடமொழிகள் சற்றுவிசேஷமாய்க் கலக்கும்படி நேரிட்டபோதிலும், அதைச் சாதாரணமாய்ப் படிப்போருக்கும் பொருள் நன்றாய்விளங்குமென நம்புகிறோம்.

கடைசியாக அர்ச்சாவிஷயத்துக்கு ஆதாரமாக நம்மபண்டிதர்கள் இயற்றிய ச

ண்டப்பிரசண்டமான கண்டனத்தையும், எங்கள் ஸமாஜாத்தாருடைய வெகுவினயமுள்ள விண்ணப்பத்தையும், ஒருதரத்துக்கிருதரம் நன்றாய்ப்படித்துப் பரிசோதித்தமேல் நம்மன்பர்கள், நிஷ்பக்ஷபாதகமாய் சொல்லும் தீர்மானத்துக்கு உட்பட நாங்கள் உண்மையாய்க்கடமைப் பட்டிருக்கிறோம்.

எத்தேசத்திலும்எந்தஸமூஹத்திலும் காலத்தால் பழுதுகள் வந்தேறுவதும்,அவற்றின் சுவரூபத்தைப்புத்திமான்கள்பரிசோதித்துச் சீர்திருத்தமுயல்வதும் சஹஜமேயாகிலும், அவரவர்முயற்சி அன்னியருக்குத் தெரியாமல் பயன்பெறுமெனில், வெகு திருப்திகரமாயிருக்கும். பெரியமரத்தினடியில் கொடுவாளால் தினம் ஒரு வெட்டு போட்டுக்கொண்டு வந்தால்வெகுகாலம்கழியும்முன் அந்தமரமேவிழுந்து விடுமல்லவா. இவ்வுண்மையைமனதிற்கொண்டு, மெதுவாயும் அந்தரங்கமாயும் பழிப்புகளை நீக்கிச் சீர்பாடடைய நாங்கள் நிச்சயித்திருந்தபோதிலும், நம்மன்புள்ள பண்டிதர்கள் எங்களையும் எங்கள் கொள்கைகளையும் முயற்சிகளையும் அக்கிரமமாய் நிந்திக்கத்தலைப்படவே, அவர்கள்வாதத்துக்கு நாங்கள் வெளியிட்டு விடையுரைக்கும்படியாயும், அதைக்கண்டு அன்னியமதத்தார் நம்மவரை யிகழும்படியாயும் நேரிட்டதேயென்று நாங்கள் பரதவிக்கிறோம். ஆகிலும் விதியின்றி வந்தகாரியத்துக்குப் பயனில்லையல்லவா. ஆகிலும் பிரகிருதத்தில் காலத்தின் கொடுமையாலோ அல்லது வேறெந்த ஹேதுவாலோவாதிப் பிரதிவாதிகளாக நிற்கும் எங்களிருதரத்தாரையும்,கருணைக்கடலாகிய கடவுளானவர், சமரசப்படுத்தி, நல்வழிகாட்டி நன்மையளித்து, அனைவரும் ஒருமித்து வாழும்படி அருளுவாரென்று வினயமாயும் ஆந்தரியமாயும் பிரார்த்திக்கிறோம்

இன்றியபத்திரிகையில் "நலங்கோருவோன்" என்று கையொப்பமிட்ட நிருபமொன்றுபிரசுரப்படுத்தியதைக்காண்பீர்கள். முன்பே ரங்கநாதசாஸ்திரி யவர்களுடைய முயற்சியைக்கேட்டு நாங்கள் உச்சாகமடைந்தோம். பாலவிவாஹத்தை நிவர்த்திக்கவேண்டுமென்பது எங்கள்பிரதிக்கியைகளில்ஒன்றேயல்லவா? கடவுள் இதற்கு இவ்வளவு ஆதரவளித்ததற்காக நாங்கள் ஆந்தரியமானகிருதக்கியதையை விளக்குகிறோம். இக்காரியம் கூடிவருமெனில்பெண்களுக்குப்புனர்விவாக மில்லாமையினால் விசேஷபாதகம் ஜனிக்கமாட்டாது. நம்மவரில் தமக்கும்தங்கள்புருஷர்களுக்கும் உள்ளசம்மந்தமின்னதென்று அவர்கள் அறிந்துகொள்ளுமுன்பே கணவரையிழக்கும் பெண்களைக்கணக்கிட்டுமுடியாதாகையால்அவர்களுடையதுஸ்ஸகமான துன்பம் நிவாரண மாகுமல்லவா? சிலகாலமாவது உலகத்தின் அனுபவங்களைப்பெற்றவர்கள் துன்பமடைவது அவ்வளவுகொடிதாயிராது. குற்றமற்றகுழந்தைகளைத் துன்பத்துக்கேயாளாக்கி அவற்றிற்கு வயதுவருமுன் கசாப்புக்காரர்போல கழுத்தையருக்க நிற்கும் தாய்தந்தைமார்களின் சுபாவமும்மாறும். இது நிற்க வயதுவந்தபிறகு செய்யும்விவாஹங்கள் சாதாரணமாய் சுவயம்வரமாகவிருக்குமாகையால் பரஸ்பரம் குணங்களையும் சுபாவங்களையும் பரிசோதித்துப் பலவிதத்திலுமிசைந்தவராய்த் தேடிமணஞ்செய்து கொள்பவர் பிறகு நடைகோணி உருவழியமாட்டார்களல்லவா? இதின்பயன்களைக்குறித்து எங்களிரண்டாவதுவிண்ணப்பத்தில் விரித்துரைப்போ மாகையால்பிரகிருதத்தில் இவ்வளவுபோதுமென்று நினைக்கிறோம்.

எங்கள்சமாஜம் ஏற்பட்ட பிறகு கடவுளின் கடாக்ஷத்தினால் ஞானக்கண்பெற்ற துரைசாமிநாயகரென்னும் பேருடையஒருசிறுவர் எங்கள்கொள்கையெல்லாம் அவலம்பிக்கத் தொடங்கவே அவருடையதாய்தந்தைமார்கள்அவரைப் பலவிதத்திலும் ஹிம்ஸிக்கத்தலைப்பட்டனர். அந்த ஹிம்ஸையைப் பொருக்கமாட்டாமல் அவர் அவருடைய பிரப்பிடமாகிய கூடலூரைவிட்டு தத்துவக் கியானத்தினால்விளையும் ஆவேசம் மேற்கொண்டு அவருடைய ஞானதாகத்தைத்திருப்தி செய்ய நிச்சயித்து பங்காளத்திற்குச் சென்றார்.

அவ்விடத்தில் பிரம்மசமாஜத்தில்பிரவே
சித்து அவர்களுடைய சகாயத்தால் தத்
துவங்களெல்லாம் அப்பியசித்துக் கொ
ண்டிருக்கிறார். அவர்பங்காளத்துத்தத்து
வபோதினியில் பங்காளிபாஷயில் பிரசு
ரமான ஒருசஞ்சிகையைத் தமிழில்மொ
ழிபெயர்த்து எங்கட்கனுப்பியதை இன்
றியபத்திரிகையில் பிரசுரப்படுத்திருக்கி
றோம். இன்னாட்டுபாஷையைக்கற்றஇவர்
பங்காளத்துக்குச் சென்று அவ்விடத்தி
யபாஷையைக் கற்றுக்கொண்டதினால் வி
ளையத்தக்க நன்மை வெகுவிரைவில்விள
ங்குமாகையால் அதைக்குறித்து நாங்கள்
விசேஷித்துரைக்க வேண்டியதில்லை யெ
னநம்புகிறோம். கடவுள்எங்கள் கோரிக்
கைக்கு மிஞ்சிபயனளிக்கிறா ரென்பதற்
கு இவற்றை யெல்லாம்விட வேறெந்தநி
தர்சனத்தை எடுத்துக்கூறக்கூடும். சமா
ஜம்தொடங்கியது இந்த ராஜதானியிலா
கிலும் வெகுவிரைவில் பலபுரங்களிலும்
முக்கியமாய் கும்பகோணத்திலும் இதன்
பயன்விளங்குமென நம்புகிறோம்.

பெண்களுக்குக்கல்வி.

பெண்களுடையமடமையால் நமதுதேச
த்துக்குவிளையுந்தீமைகளை யொருவாறுவிசித
ப்படுத்தினோம். இனி அவர்களது மடத்தை
நீக்கிஅறிவுவளரும்படிக்கல்விப்பயிற்சிசெய்
விப்பதினாலுண்டாகும் நலத்தைப்பற்றி ச
ற்று விசாரிக்கவேண்டியதானாலும்இவ்விஷ
யமெல்லாம் பெரும்பாலுமுன் கூறியவற்று
ள்அடங்கி வந்திருப்பதால் மீண்டும் விவரிக்
கவேண்டிய அவசியமில்லை. பெண்களுடை
ய அறியாமையால் எப்படிநமது அறிவுக்
கும் சன்மார்க்கத்துக்கும் செல்வத்துக்கும்
கௌரவத்துக்கும் பெருங்குறை நேரிடுகின்
றதோ, அவ்வாறெ அவர்களைக் கற்பித்து
அறிவுடையராக் குவதினால் மேல்கண்டகு
றைகளனைத்தும் நீங்கிநமதுதேசமானதுபல
விதத்திலுஞ் சிறப்படையலாம். பெண்களுக்
கு விசேஷமாக வித்தியாப்பியாசஞ்செய்து
வரும், அங்கிலேயமுதலிய நாடுகள் அடைந்
திருக்கும் அபிவிர்த்தியேபோதுமான பிரமா
ணமாயிருக்கின்றது. நம்மபெண்கள் கற்று
ணர்ந்து கௌரவமடையும் பரியந்தம், நம
க்கும் நமதுநாட்டுக்கும் விசேஷகௌரவமு
ண்டாக மாட்டாதென்பதை நாம்சித்தமா
க நம்பலாம். அவர்களைக் கண்கட்டிக்காவல்
படுத்தி அடிமைகளிலுந்தாழ்ந்தவராக நடத்
திஇம்ஸிக்குமளவும் நமதுநாடும் இன்னும்அ
திக க்ஷீணதசையடைந்து நசித்துப்போகு
மென்பதுஞ் சத்தியமே.

பெண்களைக்கற்பிப்பதினால் குடும்பத்துக்
கும் தேசத்துக்குமுண்டாகும்நன்மைகளைஒ
ருவாறு சொல்லிமுடித்தமையால் இனிபெ
ண்களுக்கு போதிக்கவேண்டிய விஷயங்க
ளைப்பற்றியும் விதத்தைப்பற்றியுஞ் சிலவச
னங்கள் கூறிஇந்த சஞ்சிகையோடுதானேஇ
ந்த விஷயத்தைமுடிக்கக் கருதுகின்றனம்.

பெரும்பாலும் பெண்களுக்கும் ஆடவர்க
ளுக்கும் கற்பிக்கவேண்டிய விஷயங்களைப்
பற்றி அதிகவித்தியாசம் காணப்படவில்லை.
இயற்கையாயுள்ள மடமைநீக்கி அறிவைவி
சாலப்படுத்துவதே கல்விப்பயிற்சியால் கரு
தப்படும்பயனாயிருக் கையாலும், பெரும்பா
லும் பெண்களும் ஆடவர்களும்அறிவிற்சமா
ன ராயிருக்கின்றமையாலும், இவர்கள்கற்
கவேடியகலைகளும் ஒன்றெனவே கூறலாம்.
அன்றியும்நாகரிக மடைந்த பலதேசத்தவர்
களும் பெண்கள்நலத்தைப் பாராட்டும் இ
த்தேசத்தார் சிலரும், பெண்களுக்கு விசே
ஷகல்வி அவசியமல்ல வென்றுங் கொஞ்
சம் எழுதவும் வாசிக்கவுமறிந்தால் போது
மென்றும் அபிப்பிராயப்பட்டிருந்தனர். ஆ
யினும் இக்காலத்தோர் தீர்க்காலோசனையுள்
ளவராய் பாரபக்ஷமின்றி உண்மையை நா
டுகின்றமையால், ஆடவரைப்போல்பெண்க
ளுக்கு சர்வசுதந்திரமுண்டென ஒப்புக்கொ
ண்டுஅவர்களுடையஅபிவிர்த்தியின்பொருட்
டுமுயற்சிசெய்கின்றனர்.அற்பகல்வியானது
ஒருவருக்கும் நன்மைபயக்கமாட்டா தென்
பது நமதனுபவத்தாலறியலாம். இப்பொழு
து நமதுநாட்டில் கல்விபயிலாநின்றசிலபெ
ண்களிடத்து ஆரோபிக்கப்படுந் தோஷங்
களுக்கும் இதுவும்காரணமா யிருக்கின்றது.
நமதுபெண்கள் இப்பொழுது கற்கிறதெல்
லாங்கூடி கொஞ்சம்வாசிக்கவும் எழுதவுமே
யன்றி அறிவை அபிவிர்த்திசெய்யும் வேறொ
ருகலையையும் பூர்ணமாயாவது அபூர்ணமா
யாவதுகற்கிறதில்லை. அன்றியும், பாமரஜன
ங்கள் இவர்கள் முற்றுங்கற்றவர்களெனவே
பாவித்து, இவர்களிடத்திற் காணப்படுகிற
அற்பதோஷங்களும்கல்வியின்பயனென்றெ
ண்ணி பெண்களுக்குக் கல்விகூடாதென்று
வீண்வாதஞ் செய்கின்றனர்.

கல்வியால் ஆடவர்கள் என்னபிரயோச
னத்தை அடைகின்றனரோ அதெல்லாம்பெ
ண்களும் அடையலாமென்பதற்குச் சந்தே
கமில்லை. கர்த்தவ்வியத்தையறிந்து கருணாநி
தியாகியகடவுளைச் சரணடைவதே கல்வியா

லுண்டாகும் பயன்களெல்லாவற்றிலுஞ் சிறந்தது.

“கற்றதனாலாயபயனென்கொல்வாலறிவன் நற்றாள்தொழாரானின்;”

வேதாத்தியானஞ்செய்ய பெண்களுக்குஅதிகாரமுண்டாவில்லையா என்பதைஇவ்விடத்து விசாரிக்கவேண்டிய அவசியமில்லை. சிலஉபநிஷத்துகள் பெண்களின் பொருட்டு சொல்லப்பட்டதுமன்றி பெண்களுக்கேநேராக போதிக்கப்பட்டதாக வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இக்காலத்திலனேகர் பெண்கள் வேதங்களை வாசிக்கக்கூடாதென்றுவாதித்தபோதிலும், வேதார்த்தங்களையறிந்து மோக்ஷமடையலா மென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். மேலும் எல்லோரும்சம்ஸ்கிருதம் வாசித்து அளவற்ற வேதங்களைப்பாராயணஞ் செய்யவேண்டுமென்பது அசாத்தியமா யிருப்பதுமன்றி உபயோகமற்ற காரியமென்றுஞ் சொல்லலாம். வித்தியாபிவிர்த்தி நாளுக்குநாள் அதிகரித்துவராநின்ற இக்காலத்தில் அனேக புண்ணியவான்கள் வேதங்களைக்கற்றுணர்ந்து, அளவிறந்தமுயற்சியோடு அவைகளின் சாரங்கள்யாவரும் எளிதிலறியும்படி சாதாரணமாக வழங்கிவரும் தேசபாஷைகளில் வெளிப்படுத்தி வருகின்றமையால், இனிவிசேஷஜனங்கள்உபயோகமாற்றசுருதிகளைக் குருட்டு பாடஞ்செய்வதில் வீண்காலம்கழிக்கமாட்டார்களென்று நம்புகிறோம். பெண்கள் வேதாத்தியாயனஞ் செய்யாவிட்டாலும் வேதாந்தவிஷயங்களையறிந்து சதாசாரங்களை அனுஷ்டித்து ஜன்மஸாபல்லியமடையக்கர்த்தர்களா யிருக்கின்றனர். ஆதலின் வேதவேதாந்தநூலும்நீதிநூலும்ஆடவரைப் போலவேபெண்களுக்கும் கற்பிக்கப்படவேண்டும்.

ஆடவர்களைப்பார்க்கிலும் பெண்கள் சரீரவன்மையிலும் தீரத்திலும் தாழ்ந்தவராயிருப் பதால் அதிகமுயற்சியும் பிரயாசையும், அலைச்சலுமுள்ள தொழில்களைப் பற்றியகலைகள் பெரும்பாலும் ஆடவர்க ளாலேயே கற்கத்தகுந்தனவாயிருக்கின்றன. இராஜதர்மம், யந்திரஸாஸ்திரம், நாவிகேந்திரம், யுத்தஸாஸ்திர முதலியவை பெண்களுடைய தன்மைக்கிசைந்தன வல்லவென்று அனேகர் அபிமதிக்கின்றனர். என்றாலும் பெண்களுக்குரிய சிலகைத்தொழில்களு முண்டு. தையல், நெசவு, வைத்தியம்முதலியவை பெண்களுக்கே தகுந்தனவாயிருக்கின்றன. மேலும் சம்ஸாரசம்ரக்ஷணார்த்தம் வெளியில்அலைந்து பலகவலையாலும் தொல்லையாலும் ஆடவர் வருத்தமடைவதினாலும், பெண்கள்கிரஹகிருத்தியங்களைச் செய்தகாலம்போகமற்றவெளியில் ஒழிவுள்ளவர்களா யிருப்பதாலும், உடனேபயன் கொடாவிட்டாலும் பின்னுக்கு பயன்கொடுக்கும், நுட்பமானவும் அருமையானவும் பலகலைகளை அப்பியசித்து அபிவிர்த்திசெய்யலாம். ஆனாலும் பெண்களானாலும், ஆடவர்களானாலும் அவர்களுடைய புத்திநுட்பத்துக்கேற்கவும் அபீஷ்டத்துக்கும் சமயத்துக்கும் தக்கபடிஉபயோகப்படும் நூல்களைகற்கவேண்டியதா யிருப்பதால், இவர்களுக்கின்னவை தகுமெனபொதுவாகநிச்சயித்தல் சரியல்ல.

பெண்களைக் கற்பிப்பதில் மற்றொருவிஷயத்தை மட்டும்முக்கியமாய் கவனிக்கவேண்டியதா யிருக்கின்றது. அதாவது, அலங்காரமென்னும் அழகியபேர்கொண்ட மோகஸாஸ்திரங்களும், பெண்கள்வாசிக்கத் தகாத அனுசிதமான வாக்கியங்களால் நிரம்பிய இதரகிரந்தங்களும், என்றைக்கும் இவர்களுக்கு விலக்கப்படவேண்டும். இதுவரையிலும் நமதுநாட்டில் பெண்கள்விசேஷமாக கல்வி பயிலாதிருந்தமையால் அவர்கள் வாசிக்கத்தகுந்த நூல்களும் அருமையாயிருக்கின்றன. இனியிவர்பொருட்டு நூதனமாக கிரந்தங்கள் ஏற்படுமென்பதற்குச் சந்தேகமில்லை. அதுவரையிலும், இப்பொழுது, சர்க்கார்பாடசாலை மாணாக்கரின் பொருட்டு தெலுங்கிலும் தமிழிலும் இயற்றப்பட்டிருக்கும் கிரந்தங்களை விட சிரேஷ்டமானவை யாங்களறியோம். இதுவன்றி பாதரிமார்களும், ஐரோப்பியஸ்திரிகளும், இத்தேசத்தாரின் பொருட்டு பலகிரந்தங்களைச் செய்திருக்கின்றனர். இவைகளையும் தற்காலத்தில் நாம் அவமதிக்கலாகாது. இவர்கள்கிருஸ்தவர்களாயிருந்தாலும், இவர்கள்செய்வதில் நலமிருக்குமாயின் அதை நன்றியோடு அங்கீகரிக்கவேண்டும்.

“எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள்காண்பதறிவு.” திருநல்வேலிமுதலிய தென்மாகாணங்களில் பாதிரிமார்கள் நமதுதேசத்துபெண்களைக் கற்பிக்க விசேஷமுயற்சிசெய்து வருவதை நாம்நன்றியோடு மதிக்கவேண்டும். மேலும் இவர்கள் முயற்சியின் பயனைப்பெறுவது பெரும்பாலும் தாழ்ந்தகுலத்தவர்களாகநாம்மதிக்கும் பறையர்களாயிருக்கின்றனர். இதைச்சற்றுநாம் கவனிப்பதுஅவசியமென்றுதோற்றுகிறது. நாம்கேவலம்தாழ்ந்தவராக மதிக்கும் பறையர்களும் மற்ற சாதியார்களும் கல்வியாலுண்டாகும் பயனைப்பெற்று நாளுக்குநாள் அபிவிர்த்தியடைந்துவர, நாம் நற்சமயங்களையெல்லாம் வீணேபோகவிட்டு பி

ன் ஏமாந்து வருத்தமடைய வேண்டியதாய் நேரிடுமென்பதற்குச் சந்தேகமில்லை.

ஆதலால் நமதுதேசத்தார் கூடியவரையிலும் முயன்றுபாடசாலைகளை ஏற்படுத்தவேண்டும். அப்படி ஏற்படுத்தசாத்தியப்படாவிட்டாலும், இப்பொழுதிருக்குந் தெருப்பாடசாலைகளுக் காவது சிறுவயதுள்ள தங்கள் பெண்களை யனுப்பவேண்டும், இவ்விடத்தில் கொஞ்சகாலமிருந்து வாசிக்கவும் எழுதவும் பயில்வார்களானல் பின்புஅவரவர் வீட்டில் தானே, சகோதரர்முதலிய பந்துக்களின் மூலமாகவிசேஷமாகக் கற்றுக்கொள்ளலாம். நமதுதேசாபி விர்த்தியை விரும்பியபுத்திமான்களுக்கும் இன்னும்பலவித யோசனைகள் புலப்படுமாதலின், இதைப்பற்றிவிஸ்தரித்தெழுதவ தொழிகின்றேம். நமதுதேசத்துபெண்களும் ஆடவர்களோடு அரியநூல்களைக்கற்று சன்மார்க்க சதாசாரமுடையவராகி, சகலசாம்பிராச்சியவைபவங்களையும் அடையத்தக்கதாக கர்த்தர்அனுக்கிரகம் செய்வாராக.

ருக்குவேத சம்ஹிதை.

(தொடர்ச்சி.)

௩-வது அனுவாகம்

சூக்தம். (௮.)

[பாவும், ருஷியும், தேவதையும் முன்போல]

வர்க்கம், ௧௫.

௧. ஆ இந்த்ர ஸாநஸிம் ரயிம் ஸஜித்வாநம் ஸதாஸஹம், வர்ஷிஷ்டமூதயே பர.

ஓ இந்திரனே, (எங்களுடைய) ரக்ஷணையின்பொருட்டு அநுபவிக்கும்படியானதும், சமமான (பகை)வர்களை வெல்லத்தக்கதும், எப்போதும் சத்துருக்களின் அபஜயத்துக் கேதுவானதும், மிகுந்ததுமாகிய பொருளைக்கொண்டுவாரும்.

௨. நி யேந முஷ்டிஹத்யயா நி வ்ருத்ரா ருணதாமஹை, த்வோதாஸோ ந்யர்வதா.

உம்மால் காக்கப்படாநின்ற நாங்கள், எந்தப் பொருளைக்கொண்டு, முட்டியின் குத்தினுலும், குதிரைகளாலும் பகைவர்களைத் தடுக்கலாமோ (அப்போப்பட்டபொருளைக்கொண்டுவாரும்.)

௩. இந்த்ர த்வோதாஸ ஆ வயம் வஜ்ரம் கநா ததீமஹி, ஜயேம ஸம் யுதி ஸ்ப்ருதஃ.

ஓ இந்திரனே, உம்மால் ரக்ஷிக்கப்படுகிற நாங்கள் திண்மையான வச்சிரத்தை வாங்கிக்கொள்வோமாக. (வாங்கிக்கொண்டு அதினல் எங்களை) எதிர்ப்போரை யுத்தத்தில் ஜயிப்போமாக.

௪. வயம் ஶூரேபிரஸ்த்ருபிரிந்த்ர த்வயா யுஜா வயம், ஸாஸஹ்யாம ப்ருதந்யதஃ.

இந்திரனே, நாங்கள் (சஸ்திரங்களை) யெறிகின்றவர்களாகிய சூரர்களோடும், (நமக்குத்) துணைவராகிய உம்மோடும் (சேர்ந்து) படைபுரியாநின்ற (பகை) வர்களை நன்றய்த் தோற்கடிக்கக்கடவது.

௫. மஹாம் இந்த்ர꞉ பரஶ்ச நு மஹித்வமஸ்து வஜ்ரிணே, த்யௌர்ந ப்ரதிநா ஶவஃ.

இந்திரனவர்பெரியவர் ; மேலும் மேன்மை பொருந்தியவர். வச்சிரதாரி (யாகியஅவரு)க்குச்சிறப்பும்,வானம்போல் மிகுந்த * பலமும் இருக்கக்கடவது.

வர்க்கம், ௧௬.

௬. ஸமோஹே வா ய ஆஶத நரஸ்தோகஸ்ய ஸநிதௌ, விப்ராஸோ வா தியாயவஃ.

எந்த புருஷர்கள் யுத்தத்திலாவது, மக்கட்பேறினிடத்தாவது வியாபித்திருக்கிருர்களோ,† அல்லது அறிவ்வாவுகின்ற புத்திசாலிகளாயிருக்கின்றர்களோ,(அவ

---

* சேனையின் பலமென உரைசெய்யப்பட்டிருக்கின்றது.

† ஆவல்கொண்டிருக்கிருர்கள்.

ர்கள்யாவரும்இந்திரஸ்துதியால்தாங்கருதிய பயனையடைவார்கள்.)

எ. யஃகுக்ஷிஃ ஸோமபாதமஃ ஸமுத்ர இவபின்வதே, உர்வீராபோந காகுதஃ.

(இந்த இந்திரனுடைய) ஸோமத்தை மிகவுங் குடிக்கின்றதாகிய வயிறு எதுவோ அது சமுத்திரம்போல பெருகுகின்றது.—வாயிலூறுகின்ற மிருதியான ஜலத்தைப்போல (இந்திரன் வயிற்றில் நிறைந்த ஸோமம் எப்போதும் வற்றாதிருக்கும்.)

அ. ஏவாஹ்யஸ்ய ஸூந்ருதா விரப்ஸீ கோமதீமஹீ, பக்வாஸாகா நதாஸுஷே.

இவருடைய இனிய சத்தியம் பொருந்திய(வாக்கானது) இப்பேர்ப்பட்டதேயாக்கும்.— (எப்பேர்ப்பட்ட தெனில்) (ஹவிசு) கொடுப்பவனுக்கு பலவிதமான தெளிந்த (உபசாரச்) சொற்பொருந்தியதும், மாடளிக்கின்றதும்,மாட்சிமைபொருந்தியதும், பழுத்தகொம்பி *னைப் போன்றதுமாம்.

கூ. ஏவாஹிதே விபூதய ஊதய இந்த்ர மாவதே, ஸத்யஸ்சித்ஸந்தி தாஸுஷே.

இந்திரனே, உம்முடைய ஐசுவரியங்கள் இப்பேர்ப்பட்டவைகளே யாக்கும்.— (அவைகள்) என்னைப்போன்ற (ஹவிசு) கொடுக்கிறவனுக்கு உடனேகாப்புகளாகிவிடுகின்றன.

கo. ஏவாஹ்யஸ்ய காம்யா ஸ்தோம உக்தம்சஸம்ஸ்யா, இந்த்ராய ஸோமபீதயே.

இவருடைய ஸ்தோத்திரங்களும் உக்தங்களும் இப்பேர்ப்பட்டவைகளாக்கும். (எப்பேர்ப்பட்டவையெனில்) அவாவத் தக்கவைகளும், இந்திரனிடத்துச் சோமபானத்தின் பொருட்டுப்பலமுறையுஞ் சொல்லத்தக்கவைகளுமாம்.

* கனிகள்பழுத்திருக்கின்றனவெனக்கொள்க.

சூக்தம், உ. (கூ)

[தேவதையும், ருஷியும், பாவும் முன் போல]

வர்க்கம், கஎ.

க. இந்த்ரேஹி மத்ஸ்யந்தஸோ விஸ்வேபிஃ ஸோமபர்வபிஃ, மஹா அபிஷ்டிரோஜஸா.

ஓ இந்திரனே, வாரும். ஸோமரஸ ரூபமாகிய அன்னங்கள் யாவற்றாலும் களியும்- (களித்து) பலத்தில் பெரியவராய் (சத்துருக்களை) வெல்லுகிறவராகும்.

உ. ஏமேநம் ஸ்ருஜதாஸுதே மந்திமிந்த்ராய மந்திநே, சக்ரிம் விஸ்வாநி சக்ரயே.

(ஓய் அத்வர்யுக்களே*)ஸோமமானது அபிஷுதமாய்(சமஸத்தில்†) இருக்கின்ற (இப்)போது களிப்பிக்கின்றதும், (சாதுவாக்குங் குணமுடையதுமாகிய இ(ச்சோமத்)தை 'களிப்புற்றவரும் எல்லாவற்றையுஞ் ‡செய்தவருமாகிய இந்திரன் பொருட்டு மீண்டுங்கொண்டுவாரும்.

ந. மத்ஸ்வா ஸுஸிப்ர மந்திபிஃ ஸ்தோமேபிர்விஸ்வசர்ஷணே, ஸசைஷு ஸவநேஷ்வா.

அழகிய மோவாய் § பொருந்தியவரே! மக்களையெல்லாமுடையவரே! களிப்புறுத்தத்தக்க (இந்த) ஸ்தோத்திரங்களால் மகிழும் (மகிழ்ந்து) இந்தவசனங்

* ருத்துவிக்குக்களின் ஒருபேதம்.

† யாகத்தில் வழங்கப்பட்ட ஒருவித பாத்திரம்.

‡ உரையில் "எல்லாக்கருமங்களையும்". என்று விரித்துச்சொல்லப்பட்டிருக்கிறது.

§ ஸிப்ர=மோவாய் 'அல்லது'மூக்கு.

களிடத்து (மற்றதேவதைகளோடு) கூட (வாரும்.)

௪. அஸ்ருக்ரமிந்த்ர தெகிர: ப்ரதி த்வாமுதஹாஸத, அஜோஷா வ்ருஷபம் பதிம்.

இந்திரனே ! உம்முடைய ஸ்தோத்திரங்களை நான் இயற்றியிருக்கிறேன். அவைகள் மேலெழும்பி பாதுகாக்கின்ற* காளை † யாகிய உம்மையடைந்தன. (நீர்) அவைகளை யேற்றுக்கொண்டீர்.

௫. ஸஞ்சோதய சித்ரமர்வாக்ராத இந்த்ர வரேண்யம், அஸதித்தே விபு ப்ரபு.

ஓ இந்திரனே, பலவகைப்பட்டதும், நயக்கத் தக்கதுமாகிய ‡ பொருளை எங்கட்கபிமுகமாகநடத்தும் ; (ஏனெனில்)உமக்கு நிச்சயமாய் போதுமானதும் அதற்குமேலும் இருக்கின்றது.

---

* பதி=இதற்குச்சாதாரண அர்த்தம் 'யஜமானன்' பகுதி பா ரக்ஷி, குடி. "(ஸோமந்) குடிக்கிறவன்" என்றும்பொருள்செய்யலாமென உரையில் சொல்லப்பட்டிருக்கிறது=

† வ்ருஷப=இதற்குக்"காளை"என்பது இயற்கையான பொருள்என்று சொல்லவேண்டுவதில்லை. மேலும் ௧௪-ம் வருக்கம் ௮-ம் ருக்குபார்க்க—ஆகிலும் உரையாசிரியர் 'இதன்பகுதி வ்ருஷ்=தெளி என்கிற ஏதுவைக்கொண்டு, " காமங்களை வர்ஷிக்கிறவர்" என உரைசெய்திருக்கிறார்.— இவ்வாறே இன்னும்பலவிடத்தில் வ்ருஷா, வ்ருஷ்ணி முதலிய வார்த்தைகள்வரும்போது அவைகளுக்கு'வருஷிக்கிறவர்' 'மழைபொழிபவர்'என்றர்த்தஞ்செய்வது அவைகளின் பகுதிக்கும் இந்திரனுடைய தொழிலுக்கு மடுத்தாயினும் மேற்சொல்லியபடியே உரைசெய்யப்பட்டிருக்கிறது.

‡ வரேண்யம்= சிரேஷ்டம் எனவுங் கொள்ளலாம்.

வர்க்கம், ௧௮.

௬. அஸ்மாந்து ஸு தத்ர சோதயேந்த்ர ராயே ரபஸ்வத:, துவித்யும்ந யஶஸ்வத.

மிகுந்தபொருளுடைய இந்திரனே! முயல் வுற்றவர்களும், புகழ் பெற்றோருமாகிய * எங்களைபொருளின் பொருட்டு அவ்விடத்துக்கு நன்றாய் நடத்தும்.

௭. ஸங்கோமதிந்த்ர வாஜவதஸ்மே ப்ருது ஶ்ரவோ ப்ருஹத், விஶ்வாயுர்தேஹ்யக்ஷிதம்.

ஓ இந்திரனே ! எங்களுக்கு மாடுகளோடு கூடியதும் சோறு பொருந்தியதும், மிகுந்ததும் சிறந்ததும் பூர்ணாயுசுக்கேதுவானதும்,அழிவற்றதுமாகியபொருளை † நன்றாய்க்கொடும்.—

௮. அஸ்மே தேஹி ஶ்ரவோ ப்ருஹத்த்யும்நம் ஸஹஸ்ரஸாதமம், இந்த்ர தா ரதிநீரிஷ:.

இந்திரனே, எங்களுக்கு மிகுந்தபுகழையும், ஆயிர(த்தொகையான) கொடையோடுகூடிய ‡ திரவியத்தையும், (பல) பண்டிகளிலேற்றிய § அந்த¶ த்தானியங்களையும் | கொடும்—

---

* தத்ர=இதற்கு 'கருமங்களில்' என்று உரைசெய்யப்பட் டிருக்கிறது.

† ஶ்ரவ:=பொருள், புகழ்.

‡ ஸஹஸ்ரஸாதமம் = ஆயிரங்கொடையாலடையப்பட்ட என்றுமர்த்தமாகும்.

§ ரதிநீ:=தேவர்களையுடைய.

¶ தா:=இதற்கு 'நெல் கோதுமைமுதலிய பிரசித்தமான வென்று உரைசெய்யப்பட்டிருக்கிறது.

| மூலத்தில் இஷ:=அன்னம்.

௯. வஸோரிந்த்ரம் வஸுபதிம் கீர்பிர்க்ருணந்த ருக்மியம், ஹோம கந்தாரமூதயே.

பொருள்காப்பவரும், ருக்குகளை அளக்கின்றவரும், (வேள்வியினிடத்திற்குச்செல்லுகின்றவருமாகியஇந்திரனை (நாங்கள்) ஸ்தோத்திரங்களால் புகழ்கின்றவர்களாய், (எங்கள்) பொருளின் ரக்ஷணத்தின்பொருட்டுக்கூப்பிடுகிறோம்.

௰. ஸுதேஸுதே ந்யோகஸே ப்ருஹத் ப்ருஹத ஏதரி:, இந்த்ராய ஶூஷமர்ச்சதி.

நியதமாகிய ஸ்தானத்தில் வீற்றிருக்கின்றவரும், மாட்சிமை பொருந்தியவருமாகிய இந்திரன்பொருட்டு, (ஸோமம்) அபிஷவதமாயிருக்குமிடந்தோறும், யஜமானனானவன் (அவருடைய) மிருந்த வலிமையைப் புகழ்கிறான்—

ஸூக்தம், ௰. (ய.)

[தேவதையும், ருஷியும் முன்போல. பாவானது, அநுஷ்டுபு. என்பதாம்.]

வர்க்கம், ௧௯.

௧. காயந்தி த்வா காயத்ரிணோ அர்ச்சந்த்யர்க்கமர்க்கிண:, ப்ரஹ்மாணஸ்த்வா ஶதக்ரத உத்வம்ஶமிவ யேமிரே.

மிகுந்த ஞானமுடையவரே! ஸாமமுடையோர். * உம்மைப்பாடுகிறார்கள்; மந்திரமுடைய (ஹோதாக்கள்) † அரசிக்கத்தக்கவராகிய (உம்மை) அர்ச்சிக்கிறார்கள்.—பிரம்மா ‡ (முதலிய மற்றப்பிராமணர்கள்) மூங்கிலை * ப்போல உம்மைமேலாக உயர்த்துகிறார்கள்.

௨. யத்ஸாநோ: ஸாநுமாருஹத் பூர்யஸ்பஷ்ட கர்த்வம், ததிந்த்ரோ அர்த்தம் சேததி யூதேன வ்ருஷ்ணிரேஜதி.

(யஜமானனானவன்) எப்பொழுது (ஓர்) மலைவாரத்தினின்று (மற்றொரு) மலைவாரம் ஏறினவனாய்† பெரியகருமத்தை‡த்தொடங்குகிறானோ அப்பொழுது, இந்திரனானவர் (அவன்) கருத்தை அறிகிறார் (அறிந்து) வர்ஷிக்கின்றவராய்§ (மருத்துகளின்) கூட்டத்துடன் அசைகிறார்.¶

௩. யுக்ஷ்வா ஹி கேஶினா ஹரீ வ்ருஷணா கக்ஷ்யப்ரா, அதா ந இந்த்ர ஸோமபா கிராமுபஶ்ருதிம் சர.

ஸோமங்குடிப்பவராகிய இந்திரனே! (பிடர்) மயிர்மிகுந்தவைகளும், ஆண்மையுடையவைகளும், சேணத்தின்வாரைப்பூரிக்கின்ற வைகளு மாகிய | ஹரிக்குதிரைகளை அவசியம்பூட்டும். (பூட்டிப்) பின்பு எங்களுடைய ஸ்தோத்திரங்களை நெருங்கிக் கேட்கும் பொருட்டுச் செல்லும்.

௪. ஏஹி ஸ்தோமாம் அபி ஸ்வர அபி க்ருணீஹ்யா ருவ, ப்ரஹ்ம ச நோ வ

† காயத்ரிண:—காயத்திரி அல்லது காயத்திரம்என்னும் பாவினமுடையோர் 'காயத்திரம்' என்பதற்கு உரையில் 'ஸாமம்' என்று பொருள்செய்யப்பட்டிருக்கின்றது.

‡ அர்க்கிண:—இதைப்பற்றி ௧௩-ம் வருக்கம்முதல்ருக்கின் அடிக்குறிப்பைப்பார்க்க.

* ருத்துவிக்குகளின் ஒருபேதம்.

* வம்ஶ=மூங்கில் 'அல்லது' குலம். ஆகையால் உரையாசிரியர் "தொம்பக்கூத்தாடிகள் கம்பமூங்கிலை அல்லது நல்லொழுக்கமுடையோர் தங்குலத்தை உயர்த்துகிறது போல" என விரித்துரைக்கிறார்.

† ஸோமக்கொடி, ஸமித்து முதலியவற்றைச்சேகரிக்க.

‡ அக்கினிஷ்டோமம்.

§ உரையில் 'காமங்களை வர்ஷிக்கின்றனர்.'

¶ "தன்னிடம் விட்டு யக்கியம் நடக்குமிடத்துக்குப் போகச் சித்தமாகிறார்" என்று உரையில் சொல்லப்பட்டிருக்கிறது.

| புஷ்டமானவைகள் என்று பொருள்.

ஸொஸவெநு யஜஞவயஉய.

இருப்பிடங் கொடுப்பவராகிய இந்திரனே, வாரும் (வந்து) ஸ்தோத்திரங்களைப்பார்த்து (புகழ்ச்சிக்குறிப்பாக)ஒலி செய்யும், ஒலிசெய்யும், ஒலிசெய்யும்*—எங்களுடைய அன்னத்தையும், அதினுடைய யக்கியத்தையும் விர்த்தியாக்கும்.

ரு. உகூிநு ாயஸஂஸ்யஂ வயஉநஂ வஉாஉநிஷியெ, ஸகெ்ராயயா ஸஉ தெஷஉணொாாண்ஷுவெ்யஷஉவ.

வலிமைபொருந்திய (இந்திரனை)வர் எங்களுடைய மக்களிடத்தும் நேசர்களிடத்தும் எப்படி (ப்புகழ்ச்சியாய்ப்) பேசுக (வெனநாங்கள்விரும்புகிறோமோ அப்படியே) மிகுந்தசத்துருக்களை நீக்குகிறவராகிய இந்திரன் பொருட்டுவிர்த்திக்கேதுவான உக்தமானது (எங்களால்) பாராட்டத்தக்கது.

சூ. தமிஜுவிகூவீயஹெ தஂஉாயெ தஂஸஉவீயெஉ, ஸஉகூ உகநஃ ஸகூ ஷிநெ ாவஸஉஷயாோநஃ.

அவரையே (நாங்கள்) சிநேகத்தின் பொருட்டு அடைகிறோம்; அவரையே பொருளின்பொருட்டும்; அவரையே நல்ல வீரியத்தின் பொருட்டும். மேலும், அந்தவலியவராகிய இந்திரனுனவர் எங்களுக்குப்பொருளளிப்பவராய், (எங்கள் ரக்ஷணத்தில்) சக்தரானார்.

வர்க்கம், கக:

எ. வஉவிவ்ரதஂஸஉ நிாஜிநு கூாதாதமிஜுஂஸஂ, மவாஂவவ்ரஜஂ வ்ர யிகூணஉஷாாயொகூிவஃ.

இந்திரனே! எங்கும் பரவியதும், எளிதில் முற்றுமடையத்தக்கதும், உம்மாலே சோதிக்கப்பட்டதுமாகிய அன்னமானது (மிகுந்திருக்கின்றது)வச்சிராயுதமுடையவரே! (இனிமேல் நீர் எங்களின்பொருட்டு) மாட்டுக்கொட்டிலைத்திறந்துவிடும். திரவியத்தைச் சம்பாதி(த்தளி)யும்.

அ. நஹிகூாரொாஉஸீ உஹெஜ்ரவாயாாண மிகூ தஃ, ஜெஷஃஸவஉதீர வஃ ஸஂமாகூஷூஷ்யஂ யஎநஉஹி.

(பகைக்கின்ற) மனிதர்களைக் கொல்லுகின்றவராகிய உம்மைக் (கொள்ளுதற்கு) பூமியும் வானமும் சக்தமன்றே. (அப்படிப்பட்டநீர்)வானத்திலுள்ளநீரை வெல்வீராக. (மேலும்) எங்களுக்குமாடுகளை அனுப்புவீராக.

கூ. கூஸ்ரஉஃகணஉ ஸ்ரஉயீ ஹவ நஎவிஉயிஷ்ரெ ஜிாஃ, ஊநு ஸொஜி ஊஂஜிகூஷ்ாயஉஸ்ிஜாஂ.

எங்கும் (வியாபித்துக்) கேளாகின்றசெவிகளையுடையவரே! எங்களுடைய கூப்பிடுதலைச் சீக்கிரமாய்க்கேளும். என்னுடைய ஸ்தோத்திரங்களை மனதில்வையும்.—என்னுடைய இந்தச் (சொற்களின்)தொகுதியை*(உமக்குச்சொந்தமான) சகாவினதுபோலச் சமீபமாக்கிக்கொள்ளும்.†

* மூலத்தில் "ஒலிசெய்யும்" என்னும் ஒரே பொருளையுடைய வூா, ரூஹிணி, ாஉவ, என்னும்மூன்றுவார்த்தைகள்பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன.—உரையாசிரியர் "ஸாமம், யஜுஸ், ருக்கு இந்தமூவேதத்தாரைத் தனித்தனியாகப்புகழும்" என்னும் பொருளுணர்த்தும்பொருட்டு அந்த மூன்று சப்தங்கள் பிரயோகித்திருப்பதாக அபிப்பிராயப்பட்டு அதற்கேற்றபடி பலமொழிகளை வருவித்து உரைசெய்திருக்கிறார்.

* ஹொஜ=ஸ்தோத்திரம் 'அல்லது' கூட்டம். "ஸ்தோத்திரரூபமான சொற்கூட்டம்" என்று உரைசெய்யப்பட் டிருக்கின்றது.

†சிநேகிதன்பேச்சைப்போல் இதுவும் உமக்கினிதாயிருக்க.

௧௦. வித்³மா ஹி த்வா வ்ருஷந்தமம் வாஜேஷு ஹவநஶ்ருதம், வ்ருஷந்தமஸ்ய ஹூமஹ ஊதிம் ஸஹஸ்ரஸாதமாம்.

மிகுதியாய் வர்ஷிக்கின்றவரும் * யுத்தத்தில் எங்களுடைய கூப்பிடுதலைக்கேட்கிறவருமாகிய உம்மை (நாம்) அறிகிறோம். மிகவர்ஷிப்ப † வராகிய (உம்முடைய) ஆயிரங் கொடுக்கத்தக்க காப்பை அழைக்கிறோம்.

௧௧. ஆ தூ ந இந்த்³ர கௌஶிக மந்த³ஸாந꞉ ஸுதம் பிப³, நவ்யமாயு꞉ ப்ர ஸூ திர க்ருதீ⁴ ஸஹஸ்ரஸாம்ருஷிம்.

ஓ இந்திரனே, விரைவாய் வாரும். குசிகர் புத்திரனே, ‡ (நீர்) களித்தவராய் அபிஷுதமான ஸோமத்தைக் குடியும். ஸ்துதிக்கத்தக்கதாகிய ஆயுளை மிகவும்விர்த்தியாக்கும். (இந்த) ருஷியை * ஆயிரத்தொகையான கொடைகளைப்பெறுகின்றவனாக்கும்.

௧௨. பரி த்வா கி³ர்வணோ கி³ர இமா ப⁴வந்து விஶ்வத꞉, வ்ருத்³தா⁴யுமநு வ்ருத்³த⁴யோ ஜுஷ்டா ப⁴வந்து ஜுஷ்டய꞉.

ஸ்துதிகளா லடையத்தக்கவரே! இந்த ஸ்தோத்திரங்கள் எல்லாவிடங்களினின்றும்நாலண்டையும் உம்மை அடையக்கடவது. (மேலுமவைகள்) மிகுந்த வாயுளுடையவராகிய (உம்மை) அநுசரித்துத் தாம் மிகுந்தவைகளும் உம்மால் ஏற்கப்பட்டவைகளாய் (நம்மிடமுமது) அன்பிற் கேதுவானவைகளும் ஆகக்கடவது.

* உரையில் 'காமங்களைவர்ஷிக்கிறவர்'.

† குசிகர் புத்திரன் பிரசித்தமாய் விசுவாமித்திரனே யாயினும் இந்திரனையும் அவர்பிள்ளையென்றுசொல்ல ஆதாரமாக ஒருகதை அநுக்கிரமணிகையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது:— "இஷிரதி யென்பவருடைய மகனாகிய குசிகர் இந்திரனுக்கொப்பானபிள்ளையை விரும்பி பிரம்ம சரியையில் நடந்தார்."

‡ உரையில் 'ருஷி' சப்தத்திற்கு "புலன்படாதவற்றைப் பார்ப்பான்" என்றுபொருள்செய்து கடைசி வாக்கியத்துக்குரை "என்னைப்பணக்காரனும் புலன்படாதவற்றைப் பார்ப்பவனுமாக்கும்" என்றுசெய்யப்பட்டிருக்கிறது.

பகவத்கீதை

௧௧ வது அத்தியாயம்.

அர்ஜுனன்சொல்.

௧. என்னை அநுக்கிரகிக்கும் பொருட்டு உத்கிருஷ்டமானவும், ரகசியமானவும், பரமாத்மத்தை விளக்கும்படியானவும் எந்த வாக்கியம் உன்னால் சொல்லப்பட்டதோ அதனால் என்னுடையமோகம் நீக்கப்பட்டது.

௨. ஓ தாமரையிதழ்க்கண்ணா! உன்னால் பிராணிகளுடைய வுற்பத்தி பிரளயங்களைச விஸ்தாரமாகக் கேட்டேன். நாசரகிதமான வுன்னுடைய மாகாத்மியத்தையும் கேட்டேன்.

௩. ஓ பரமேசுவரா! இது இவ்வாறே (என்றால் இதற்கு சந்தேகமில்லை.) எவ்விதமாக ஆத்ம ஸ்வரூபத்தை நீ சொல்லியிருக்கின்றாயோ அவ்வாறே ஈசுவர சம்பந்தமான வுன் சுவரூபத்தைப்பார்க்க இச்சிக்கின்றேன்.

௪. யோகத்துக்குப் பொருளாகிய ஓ பிரபுவே! அந்தரூபம் என்னால் பார்க்கப்படக்கூடுமானதாக உனக்குத் தோன்றுமானால் நீசாசுவதமான நிதர்சனத்தைக் கொடுப்பாயாக.

கிருஷ்ணன்சொல்.

௫. ஓ பார்த்தனே! அநேகவிதமானவும், திவ்விய மானவும், நாநாவித வர்ணங்களையும் ரூபங்களையும் உடைத்தானவும், நூறுகளானவும் ஆயிரங்களானவும் என்னுடையஆகிருதிகளைப்பார்.

௬. ஓபாரதனே! (எண்ணிறந்த) ஆதித்தியர்களையும், வசுக்களையும், ருத்திரர்களையும், அசுவினீதேவதைகளையும், அவ்வாறேவாயுக்களையும் பார்ப்பாய். எப்பொழுதும் பார்க்கப்படாதவும், அநேகமுமான அற்புதங்களைப்பார்ப்பாய்.

௭. ஓ அர்ஜுனா! இப்பொழுது ஸ்தாவர ஜங்கமங்களோடும் கூடிய சமஸ்தமான ஜகத்தும் என்னுடைய இச்சரீரத்தில் ஓரிடத்தில் இருப்பதாகப்பார். (இன்னும்)அந்நியமான எதைப்பார்க்கவிரும்புகிறாயோ அதையும் பார்ப்பாய்.

௮. இந்த ஒன்னுடைய கண்களாலே என்னைப்பார்க்க சக்தனாகமாட்டாய். திவ்வியமான (ஞான)க்கண்களைக் கொடுக்கின்றே

ன். ஈசுவரசம்பந்தமாய் என்சக்தியைப் பார்ப்பாய்.

ஸஞ்சயன்சொல்.

௯. ஓ திருதராஷ்டிரனே! மகாயோகங்களுக்கு அதிபதியாகிய ஹரியானவன் இந்தப்பிரகாரமாகச் சொல்லி அப்புறம் அர்ஜுனன்பொருட்டு உத்கிருஷ்டமானவும்ஈசுவரசம் பந்தமானவும் ஒரு ரூபத்தைக் காட்டினான்.

௧௦. அநேகமான முகங்களையும் நேத்திரங்களையுமுடையவும், அநேகமான ஆச்சரியங்களைக் காட்டுகின்றவும், அநேகதிவ்வியாபரணங்களை யணிந்தவும், அநேக திவ்வியாயுதங்களைத்தரித்தவும்;

௧௧. திவ்வியமான மாலைகளும் வஸ்திரங்களும் தரித்திராநின்றவும், திவ்விய சுகந்தமணிந்திராநின்றவும், சமஸ்த ஆச்சரியமானவும், எங்கும் முகமுடையவும், அநந்தமானவும் தேவனை (அர்ஜுனன்கண்டான்);

௧௨. ஆகாசத்தில் ஆயிரசூரியர்களுடைய காந்தியானது ஏககாலத்தில் உதிக்குமாயின் அந்தகாந்தி இம்மகாத்துமாவினுடைய காந்திக்குச் சமானமாகும்.

௧௩. பகுவிதமாக ஏற்படுத்தப்பட் டிருக்கின்ற சமஸ்தமான ஜகத்தையும் தேவதேவனுடைய அச்சரீரத்தில் ஒரு பக்கத்தில் இருப்பதாக அபபொழுது அர்ஜுனன் பாரத்தான்.

௧௪. அதன்பிறகு அர்ஜுனன் ஆச்சரியத்தோடும் கூடினவனாய் புளகாங்கிதமான ரோமங்களுடையவனாய் அத்தேவனைச்சிரசினால்நமஸ்கரித்து அஞ்சலிசெய்தவனாய்சொன்னான்.

௧௫. ஓ தேவனே! உன்தேகத்தில் தேவர்களையும் அவ்வாறேசமஸ்தமான பிராணிகோடிகளையும் கமலாசனத்தில்வீற்றிருக்கும் பிரமனையும் சகலருஷிகளையும் திவ்வியமான சர்ப்பங்களையும் பார்க்கிறேன்.

௧௬. ஓ விசுவேசுவரனே! விசுவரூபந்தரித்தவனே! அநேகபாஹுக்களையும், வயிறுகளையும், முகங்களையும் கண்களையும் உடையவுன்னை எவ்விடத்தும் அநந்தாகார முடையவனாகக்காண்கிறேன். மறுபடியும் உன்னுடைய ஆதியும் மத்தியமும் அந்தமும் காணேன்.

௧௭. கிரீடமுடையவும், கதையுடையவும், சக்கரத்தையுடையவும், அதிககாந்தியையுடையவும், எவ்விடத்தும்பிரகாசிக்காநின்றவும், சுவலிக்கின்ற அக்னி சூரியர்களுடையவொளியை யுடையவும், பிரிக்கக்கூடாதவும் உன்னை எங்கும் பார்க்கிறேன்.

௧௮. உத்கிருஷ்டமான பிரம்மா என்று அறியத்தக்கது; நீ யிந்தஜகத்துக்கு உத்தமமான ஆசிரயம்; நீ நாசரஹிதனும், ஸ்திரமான தர்மசம்ரக்ஷகனும், புராணபுருஷனும் என்பது என்னுடைய மதம்.

௧௯. ஆதிமத்தியாந்த ரஹிதனும் அபரிமிதபராக்கிரமம் உடையவனும், எண்ணிறந்த பாகுக்களை உடையவனும், சந்திரசூரியாளாகிற நேத்திரங்களை யுடையவனும், பிரகாசிக்கின்ற அக்னிபோன்ற முகத்தை யுடையவனும் ஆகிய உன்னை நிஜமான தேஜஸினாலே பிரபஞ்சத்தை தபிக்கச்செய்கிறவனாகப்பார்க்கிறேன்.

௨௦. வானத்துக்கும் பூமிக்கும் மத்தியிலிருக்கும் எல்லாவிடமும் ஒவ்வொருதிசையும் உன்னால் அடையப்பட் டிருக்கின்றன. ஓ பலவானே! மூன்றுலோகங்களும் பயங்கரமான நின் முகவிசித்திரங்களைக் கவலையுற்றமனதோடு பார்க்கின்றேன்.

௨௧. தேவகூட்டங்களுள், சிலர் உன்னை அடைக்கலம் பெறுவதையும், சிலர் பயந்து கூப்பிய கைகளோடும்நின்திருப்புகழ்பாடுகின்றனர். மகாருஷிகளுஞ் சித்த சமூகங்களும்நின்னைக்கொண்டாடி, நினதுநாமத்தை சங்கீர்த்தனைகளால் மேன்மைப்படுத்துகின்றனர்.

௨௨. உருத்திரகணங்களும், ஆதித்தியர்களும், வசுக்களும், பித்ருதேவதைகளும், கந்தர்வர்களும், யக்ஷரும், அசுரரும், சித்த சமூகங்களும், இவர்களெல்லாம் ஆச்சரியத்தோடும் உன்னைப்பார்த்துக்கொண் டிருக்கின்றனர்.

முண்டகோபநிஷத்து.

(௨-வது அத்தியாயம்.)

இதுஸத்தியம். நன்றாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கிற நெருப்பிலிருந்து அதைப்போலிருக்கிற கணங்கள் ஸஹஸ்ரவிதமாய் எப்படி யுண்டாகிறதுகளோ, அப்படிதான், ஓ ஸவும்மியனே! அந்த அக்ஷரத்திலிருந்து (அவிநாசி பிரும்மத்திலிருந்து) நானாவிதமான பாவங்களும் உண்டாய் அங்கேயே போய்ச்சேருகிறதுகள். (அவர்)திவ்வியராயும், சரீரமில்லாதவராயும், ஆத்மஸ்வரூபியாயும், வெளியிலும் உள்ளேயுமிருக்கிறவராயும், பிறப்பில்லாதவராயும், பிராணமில்லாதவராயும், மனமில்லாதவராயும், சுப்பிரமாயும், உயர்ந்த அக்ஷரத்துக்கும் உயர்ந்தவராயு மிருக்கிறார். இவற்றிலிருந்து பிராணமுண்டாயிற்று. மனஸ்ஸும் ஸமஸ்தமான இந்திரியங்களும், ஆகாசம், வாயு, ஜோதிஸ்ஸு, அப்பு, ஸர்வாதாரமான பிருதிவி

யுமுண்டாச்சுதுகள். இவருக்கு அக்நி சிரஸ்ஸு, சந்திரசூரியர்கள் கண்கள், திக்குகள் ஸ்ரோத்ரங்கள், வேதங்கள் சொற்கள், வாயு பிராணம், ஹிருதயம் பிரபஞ்சம், பாதங்கள் பூமி, இவர் ஸர்வபூதங்களுக்குள் வியாபித்திருக்கிற ஆத்மா, அவரிடத்திலிருந்து எதற்கு சூரியன் ஸமித்தாயிருக்கிறதோ அந்த அக்கினியும், சோமத்திலின்றும் பர்ஜந்நியனும், பூமியில் ஓஷதிகளும், புருஷன் ஸ்திரீயினிடத்தில், ரேதஸ்ஸைவிட்டு (இந்தப்படி புருஷனின்றும்) (பரமாத்மாவினின்றும்) வெகு பிரகாரமான பிரஜைகளுண்டாச்சுதுகள். அவனிடத்திலிருந்து ருக்கு, சாமம், யெஜுஸ்ஸுகள், தீக்ஷைகள், யக்கியங்கள், சமஸ்தமான கிரதுக்களும், தக்ஷிணைகளும், ஸம்வத்ஸரமும், சோமனும், சூரியனும், திரிந்துகொண்டிருக்கிற லோகங்களும் (உண்டாச்சுதுகள்.) அவனின்றும்வேதங்கள் வெகுப்பிரகாரமாய் உண்டாச்சுதுகள். ஸாத்தியாளும், மனிதர்களும், பசுக்களும், பக்ஷிகளும், பிராணமும், அபானமும், நெல்லும், செந்நெல்லும், தபஸ்ஸும், சிரத்தையும், ஸத்தியமும், பிரம்மசரியமும், விதியுமுண்டாச்சுதுகள். அவனின்றும், ௭ - பிராணங்களும், ௭ - ஜ்வாலைகளும், ஸமித்துகளும், ௭ - ஹோமங்களும், ஹிருதய குகையில் சயனித்துக்கொண்டிருக்கிற பிராணங்கள் எதுகளில் சஞ்சரிக்குமோ, அந்த இவ்வேழுலோகங்களுமுண்டாச்சுதுகள். ஏழேழே இந்தவிதமாய் யேற்படுத்தப்பட்டிருக்கிறதுகள். இதிலிருந்து ஸமஸ்தமான ஸமுத்திரங்களும் மலைகளும் உண்டாச்சுதுகள். இதிலிருந்தும் ஸர்வ பிரகாரமான ஆறுகளும் பெருகிறதுகள். இதினின்றும் ஸமஸ்தமான ஓஷதிகளும் இந்த அந்தராத்மா எதினால் நின்றிருக்கிறதோ அந்த ரஸங்களுமுண்டாச்சுதுகள். புருஷந்தான் இந்தப் பிரபஞ்சமும், கர்மமும், தபஸ்ஸும், உயர்ந்த அமிருதமாகிய பிரும்மமும், குகைக்குள்ளிருக்கிற இதை யெவனறிவானோ அவன் ஓ ஸவுமியனே! அஞ்ஞானமுடியை அவுக்கிறான். பிரகாசமாயும், சமீபமாயும், குகையில் திரிந்துசொண்டு அடையவேண்டிய மஹாபதமென்று பேரையுடைத்தானதா யிருக்கிறது. சலிக்கிறதும், சுவாஸம் விடுகிறதும், கண்ணை மூடுகிறதும், இதெல்லாம் இதற்குள்ளடங்கியதாயிருக்கிறது. ஸத்தாயுமஸத்தாயும் வரிக்கத்தக்கதாயும், சிரேஷ்டமானதாயும், பிரஜைகளுடைய ஞானாபேக்ஷையாய் உயர்ந்திருக்கிறதாயும், அறியுங்கள். எது காந்தியை உடைத்தானதோ அணுவைப் பார்க்கிலும், அணுவாயிருக்கிறதோ, எதில் லோகங்களும் லோகத்திலிருக்கிறபேர்களும் அடங்கியிருக்கிறார்களோ, அந்த அக்ஷரப்பிரும்மமானது இதுதான்! அதுதான் பிராணன், அதுதான் வாக்கும், மனஸ்ஸும், இதுதானந்த ஸத்தியமான பதார்த்தம். அது மரணமில்லாதது. அதுதான் குறியை அடிக்கவேண்டிய லக்ஷியமென்றும் ஓ சவுமிம்யனே! அறி. உபநிஷத்து ஸம்பந்தமான மஹாஸ்திரமாகிய தனுஸ்ஸைப் பிடித்துக்கொண்டு அதில் ஸந்திக்கவேண்டியது. அதை பகவத்பக்தியால்வளைத்து உபாசனையால்தீக்ஷண்ணியமான பாணத்தை ஸந்திக்கவேண்டியது. ஓ ஸவும்மியனே! அந்த அக்ஷரந்தான். (பிரம்மந்தான்) லக்ஷியமென்று அறி. பிரணவம் தனுஸ்ஸென்றும், ஆத்மா பாணமென்றும், பிரும்மம் லக்ஷயமென்றும் சொல்லப்படுகிறது. பிரமாதமில்லாமலிருக்கிறவனால்தான் அந்தக்குறி அடிக்கக்கூடும். (பக்தனானவன்) பாணம்போல் தன்மயமாய் ஆகவேண்டியது. எவனுக்குள் ஸ்வர்க்கமும், பூமியும், ஆகாசமும், மனஸ்ஸும், ஸமஸ்தமான பிராணங்களுடன் நெய்யப்பட்டிருக்கிறதுகளோ அந்த ஒரு ஆத்மாவை அறியுங்கள். இதர வார்த்தைகளை விட்டுவிடுங்கள். இவர்தான் மோக்ஷத்துக்கு அணை. இவர்தான்மிருதத்துக்கு அணை. உளுவாய்க்குள்ளரங்கள் போல் நாடிகள் எவ்விடத்திலொன்றாய்க் கலந்திருக்கிறதுகளோ, அந்த இவர் நாநாவிதமாய் ஸம்பவித்துக்கொண்டு உள்ளே எரிந்துக்கொண்டிருக்கிறார். ஆத்மாவைப்பிரணவத்தால் தியானம் பண்ணுங்கள். உங்களுக்கு அஞ்ஞானத்திலிருந்து அக்கரையில் போகவேண்டியத்துக்காக க்ஷேமங்கிடைக்கட்டும். எவர் ஸர்வக்கியராயும், ஸர்வவித்தாயும் இருக்கிறாரோ பூமியில் இந்த மஹிமை எவருடையதோ இந்த ஆத்மாவானவர் திவ்வியமான பிரம்மபுரத்தில் (ஆகாசத்தில்) ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறார். மனோபயராயும், பிராணத்துக்கும் ஸ்வர்க்கத்துக்கும் நாயகராயும், அன்னத்தில் ஸ்தாபிதமாயும் (அந்த ஆத்மாயிருக்கிறது) ஹிருதயத்தை தாரணம் செய்து சத்விஷயமான ஞானத்தால் ஆனந்த ரூபமாயும், அமிர்தமாயும், எது பிரகாசிக்கிறதோ அதை தீரர்கள் செம்மையாய்ப் பார்க்கிறார்கள். அந்த பராபரத்தைப் பார்த்தால் ஹிருதயத்திலிருக்கிற முடிகள் உடைந்துபோகும். ஸர்வ சம்சயங்களும் அறந்துபோகும். இவனுடைய கர்மங்களும் க்ஷயித்துப்போகும். பொன்மயமான உயர்ந்த கோசத்தில் ஸர்வதோஷவிஹீனமான பிரம்ம அம்சங்களில்லாமலிருக்கிறது. அது சுப்பிரமாயும், ஜோதிஸ்ஸுகளைக்காட்டிலும்,

ஜோதிஸ்ஸாயுமிருக்கிறது. அதை ஆத்மவித்துக்கள் அறிவார்கள். அவ்விடத்தில் சூரியன் பிரகாசிப்பதில்லை. சந்திரன் நக்ஷத்திரங்கள் பிரகாசிப்பதில்லை. இந்த மின்னல்கள் பிரகாசிப்பதில்லை. இந்த அக்கினி எப்படிப் பிரகாசிக்கும். அவரொருவரோபிரகாசிக்கும்போது அவருடைய தேஜஸ்ஸினல்தான், மற்றதெல்லாம் பிரகாசிக்கிறது. இந்த அமிர்தமான பிரும்மந்தான்முன்னேயும்பிரும்மம், பின்னேயும்பிரும்மம். தெற்கேயும் வடக்கேயும் கீழும் மேலும் பிரும்மந்தான் வியாபித்திருக்கிறது. இந்த பிரம்மந்தான் இந்த சிரேஷ்டமான ஸமஸ்தப் பிரபிஞ்சமும்.

த்விதீயமுண்டகஃ

மநுநூல்

இரண்டாவதத்தியாம்(தொடர்ச்சி.)

௩௪. நான்காவது மாதத்தில் குழந்தையைவீட்டிற்குவெளியில் கொண்டுவந்து சூரியனைக்காட்டவேண்டியது; ஆராம்மாதத்தில் அன்னப்பிராசனம் செய்யவேண்டியது. அல்லது குலதர்மத்தினல் எதுமங்களகரமாய் விளங்குகிறதோ அதையும் செய்யலாம்.

௩௫. முதல் வருஷத்திலாவது மூன்ரும் வருஷத்திலாவது வேதவிதியினல் பிரும்மக்ஷத்திரியவைசியர்களால் முறைப்படி சௌளம்செய்யப்படவேண்டியது.

௩௬. பிராம்மணனுக்கு கர்பாஷ்டமத்திலும், க்ஷத்திரியனுக்கு கர்பம் முதல் பதினேராம் வயதிலும், வைசியனுக்குக் கர்பம்முதல் பன்னிரண்டாம் வயதிலும் உபநயனம்செய்க.

௩௭. பிரும்மவர்ச்சஸை விரும்பும்பிராமணனுக்கு ஐந்தாம் வயதிலும், பலத்தைக்கோரும அரசனுக்கு ஆரும்வயதிலும், பொருளைக்கோரும் வைசியனுக்கு எட்டாம்வயதிலும்(உபநயநம்)செய்க.

௩௮. காயத்திரி உபதேசத்துக்கு பிராமணனுக்குப் பதினறுவயதையும், க்ஷத்திரியனுக்கு இருபத்திரண்டு வயதையும், வைசியனுக்கு இருபத்திநான்கு வயதையும் அதிக்கிரமிக்கக்கூடாது.

௩௯. அதற்குமேல் இம்மூவருக்கும் முறைப்படி உபநயனமாகாவிடில், அவர்கள் காயத்திரிபாதகராளாயும், விராத்தியராயும், பெரியோரால் விலக்கப்பட்டவராயும் ஆவார்கள்.

௪0. இவ்வாறு முறைப்படி பரிசுத்தமாக்கப்படாத அவர்களுடன் பிராம்மணர் எவ்வித ஆபத்திலும்கூட வேதாப்பியாச விவாஹாதி சம்மந்தங்களை வைத்துக் கொள்ளக்கூடாது.

௪௧. பிரும்மசாரிகள் அவரவர் வர்ணத்துக்குத்தக்கபடி கிருஷ்ணஜினம்,(மான்தோல்) இவற்றை உத்தரியமாயும், சணல் வெள்ளாட்டுத்தோல், க்ஷெளமம், மயிர் இவற்ருல் நெய்தவஸ்திரங்களை அரைக்கும் தரிக்கவேண்டியது.

௪௨. பிராம்மணனுக்கு முப்பிரியாய்ச்செய்த முஞ்சியும், க்ஷத்திரியனுக்குமூர்வியால் செய்தவில்லின்நாணும், வைசியனுக்கு முப்பிரியான சணலும் அரைநாண்களாகவேண்டியது.

௪௩. முஞ்சிகிடைக்காவிடில், தர்ப்பம், அஸ்மாந்தகம், பல்பஜம் இவற்றை முப்பிரியாக்கி, ஒன்று மூன்று அல்லது ஐந்து முடிபோட்டு தரிக்கவேண்டியது.

௪௪. பிராம்மணனுக்குப் பஞ்சினலும, அரசனுக்கு சணலினலும், வைசியனுக்கு ஆட்டின் மயிராலும், மூன்றுவடமுள்ளதாயும், தலைமேலால் போட்டுக் கொள்ளும்படியாயும் பூணூலிருக்கவேண்டும்.

௪௫. பிராம்மணன்வில்வம் அல்லது பலாசத்தையும், க்ஷத்திரியின் ஆல அல்லது காதிரத்தையும்(கருங்காலிதண்டம்) வைசியன் மூங்கில் அல்லது உதும்பரத்தையும் தண்டமாய்தரிக்கவேண்டும்.

௪௬. பிராம்மணன்தண்டம்சிரசளவும், க்ஷத்திரியன் தண்டம் முகத்தளவும், வைசியன்தண்டம் மூக்களவும் இருக்கவேண்டும்.

௯௭. அந்ததண்டங்களெல்லாம் கோணலின்றியும், ஒடியாமலும், காட்சிக்கழகாயும், மனிதற்கு பயமுண்டாக்காதனவாயும், புறணி (மேற்பட்டை)நீங்காமலும், தீபடாமலும்இருக்க வேண்டும்,

௪௮. விருப்பமானதண்டத்தை யெடுத்துக்கொண்டு சூரியனுக் கெதிரெநின்று, அக்கினியைப் பிரதக்ஷணம் செய்து

விட்டு, பிரும்மசாரி விதிப்படி பிக்ஷை செய்யவேண்டியது.

௪௯. பிக்ஷை கேட்கும்போது பிராம்மண சிரேஷ்டன் 'பவதி' என்னும்சொல்லை முதலிலும், க்ஷத்திரியன் அதைநடுவிலும், வைசியன் அதைக் கடையிலும் சொல்லவேண்டியது.

௫0. முதலில் அவன்தன் தாயிடத்திலேனும், தமக்கையிடத்திலேனும், தாயுடன் பிறந்தவளிடத்திலேனும்பிக்ஷைசெய்துவிட்டுப் பிறகு அவமானஞ் செய்யாத மற்றயாரிடத்திலாவது செய்யவேண்டியது.

நிருபம்.

எனதன்புள்ள சோதரர்களே !

சிலநாளுக்குமுன் சேலத்தில் ஏற்படுத்தப்பட்ட திருச்சபையைப் பற்றி முன்னொரு கடிதத்தில் பிரஸ்தாபித்தேனல்லவா? மேற்கண்டசபை கடவுளுடைய அநுக்கிரகத்தாலும் உங்கள் ஆசீர்வாதத்தாலும் நிலையாக நடந்துவருகின்றது. சிலநாளுக்குமுன் அச்சபையாரில் ஒருவரால்எழுதிப்பிரசங்கிக்கப்பட்டஉபந்நியாசமொன்றை இத்துடன் அநுப்புகின்றேன்; தயைசெய்து இதற்கு உங்கள் பத்திரிகையில் சிறிதிடங்கொடுப்பீர்களென்று நம்புகிறேன்.

ஜூலை மீ
௧௮௯௫ ௵
சேலம். } இங்ஙனம்
ஊழியன்
ஒரு சுதேசி.

சருவ வல்லமையுள்ள கடவுளின் மகிமையைப்போல் வாக்குக்கும் மனதுக்கும், மெட்டாத ஆழமும், நீளமும் பெற்று சகலநதிகளுந் தனக்குள்ளடங்கக்கொள்ளுதலால் "நதிபதி" என்ற நாமதேயம் படைத்து பருவதம்போன்ற அலைகளைச் சுழற்றிக் கர்ச்சிக்கிற பெரிய சமுத்திரத்திற்கு முன்பாக தானுஞ் சமானமென்று கர்ச்சித்து தன் அற்ப அலைகளைவீசி தத்திவிழுந்து ஓர் சிறிய வாய்க்காலானது எதிரோ வந்ததுபோல அறிவை விளக்கத்தக்க இச்சபையின்கணுள்ள பெரியோர்முன்பாக தெரியாமையையுடைய யான் என் கருத்திலெழுந்த ஓர் விஷயத்தைப்பற்றிப் பேசத்துணிகிறேன். இந்தத்துணிவுண்டானது எனக்கே நகைப்பாயிருந்தாலும் விருப்பமானது என் சொல்லைக்கேட்கிற தில்லை. ஆதலால்பேசும்படிவிடைகொடுக்கக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

அஃதாவது கடவுளாற் படைத்த சர்வஜீவகோடிகளையும் நல்வழியைக்கெடுத்து துர்வழியைக்கொடுத்து மயக்குகின்ற கொடிய காமத்தைப்பற்றித்தான்.

சகல சிருஷ்டிப்பிலும் சிறந்தசிருஷ்டிப்பென்று மனிதர்களாகிய நம்மை ஏன் சொல்லப்படுகிறதென்றால் அறிவு ஒன்று விசேஷித்த தன்மையாற்றான். அந்த அறிவுடைமையில்லாவிட்டால் நமக்கும் பசுவுக்கும் பேதமில்லை. மனிதனை இரண்டுகாலுடைய மிருகமென்றுசொல்லப்படும். அங்ஙனமிருக்க அறிவினாற்சிரேஷ்டத்துவ மடைந்த மனிதர்களாகிய நாம் நம்மைப்படைத்தகடவுளின் சித்தத்திற்கேற்க நன்மையின் வழியேயொழுகி நல்லுணர்விற் சிறந்து நற்கிரியைகள் புரிந்து அவருடைய ஒப்பற்றகருணைக்குப்பாத்திரர்களாகி உலகில்வாழ்ந்து அவருடைய பேரின்பப்பதவியை யடைகிறதை விட்டு சிற்றின்பமாகியகொடிய வலையிற்சிக்கி மாய்கையாகிய இருளடைந்து நல்லறம் நல்லுணர்வு நன்னடக்கை இவைகளைக்கைவிட்டு உலகத்தில் பாவமும் பழியும்மேலிட்டு பாவத்தில் மூழ்கி "சருகரிக்கநேரமின்றிக் குளிர்காயநேரமில்லை" என்றதுபோல ஊழிகாலம் உள்ளமட்டும் மோக மயக்கத்திற்றானேதடுமாறி "வாய்த்தவிடும்போய் அடுப்பினெருப்பும் போனதுபோல்" இம்மையிலும் மறுமையிலும்இன்பமற்றுத் துன்பத்தை யடைந்திறந்துபோவது தகுதியோ ?

ஐயோ ! கடவுளால் நமக்கு அளந்து வைத்திருக்கிற நாட்களை "பணத்துக் கோரம்பு கொண்டு பாழுக் கிறைப்பவர் போல" வீணான துராட்டங்களிற்செலுத்திவிட்டு சிலேத்துமங்கட்டி யிழுக்கிற முடிவுகாலத்தில் வாயை ஆ வென்றுதிறந்துவிடுகிறதனாற் பிரயோசன மென்ன ?

மனிதனைக் கெடுக்கிற காமம்-குரோத

ம்-லோபம்-மோகம்-மதம்-மாற்சரியம் என்னும் இந்தஆறுபகைகளுக்குள்முதற்பகையாகிய இந்தகாமமானது எல்லாவிதத்தீங்குக்கும் ஏதுவாயிருக்கின்றது. இதிலிருந்தே மற்றதீமைகள் முழுதும் விளைகின்றன. இதுநெஞ்சிலுற்பத்தியாகி அமாவாசை யிருளைப்போல கறுகறுத்து பெரும்புதைபோல் வளர்ந்து அறிவைபடக்கிப்பொறிபுலாதிகளைத்தன்வசியப்படுத்திக்கொண்டு புலன்களை தீய வழிகளிற்செலுத்தி எல்லா வெறியிலும் பெரிய வெறியாகி நன்மைகளின் மார்க்கத்தைமறைத்து தின்மைகளின் வழியைத்திறந்து காட்டி அவைகளுக்குள்ளே நம்மை நுழைத்து "காமிக்குமுறையில்லை" என்ற வாக்கியத்தை நிச்சயமாக்கி தாரதம்மியம்பாராமற் கண்ணுற்கண்ட ரூபங்களையெல்லாம் இச்சிக்கச்செய்து நற்கூட்டத்திற்சேரவும் நன்னடக்கையிற் செல்லவும் ஒட்டாமல் மாயவிலங்கைப்பூட்டி ஞானம் கல்வி இவைகளுக்குப்புறம்பாக்கி மோக நெருப்பால் உடல் வெதும்பவும் உள்ளந் தத்தளிக்கவும் புத்தியைப் பாதரசம் போல் அலைத்து கைப்பொருளழியவும் தேகதிடங்கெடவும் உறுக்கி, உற்றார்பகைக்க, ஊரார்நகைக்க, பெற்றார் வருந்த, பெண்டீர்கலங்க, மானயீனமாகி கண்கெட்ட ஊர்ப்பன்றியைப்போல் அசங்கியமின்றி யெதிலும் வாய்வைக்கச்செய்து அதின்குடல் நிறையாதுபோல் இவன்மனதுநிறைந்து திருப்திகரமாகாமல் அலையும்படிச்செய்துநரை-திரை-மூப்பு-பிணி சாக்காடு என்னும் இவ்வைந்தும் உறவு கொள்ளும்படி பண்ணி முடிவில்நரகத்தில் வீழச்செய்துவிடுகிறது. "தாதாஉன்னைநம்பினே னென்றவனுக்கு பயப்படாதே என்னைப்போல மூன்றுநாமங் குழையாமற்போடுகிறே னென்று சொன்னதுபோல" இந்தகாமத்தின் பயிர்ச்சி இவ்வளவுசெய்துவைக்கும்.

"இன்பமோ சிறிதாகு மிதில் வரு துன்பமோ கரையில்லாத் தொடுகடல்" என்று திருவிளையாடலிற் சொல்லியபடி இது அற்பசுகமாயிருந்தாலும் பின்னடிக்குப்பெரிய துன்பத்தை விளைப்பதாயிருக்கிறது.

ஓர்நாயானது உலர்ந்துபோன ஒருவெள்ளெலும்பைப் பார்த்து இதிற்பசையிருக்கிறதென் றெண்ணி அதைக்கடிக்கையில் தன்பற்களிற்காயம்பட்டு உதிரம்வர அது அந்தயெலும்பிலிருந்து வருகிறதென்று பின்னுமதைப்பலமாகக்கடித்து வாய்வீங்கி ஊளையிடுகிறதுபோல் இந்தகாமமானது மனிதரின் நெஞ்சி லுற்பத்தியானாலும் அதைமறக்கடித்து எதிரோ தோற்றுகிற விஷயமாகிய உருவங்களி லென்னமோயிருக்கிறதாகவெண்ணச்செய்யும்.

இக்கொடிய காம விகாராவஸ்தையினால் ஈடழிந்துபோன அநேகரைக்குறித்து நாம் கேள்விப்பட்டிருப்பதுமன்றி பிரத்தியக்ஷமாக அநேகரைப் பார்த்துமிருக்கிறோம். "நீதறுகழைக்கரும்பின் றீஞ்சுவையிரதநீத்துக் கோதினைவிரும்பிக்கொள்ளுங் கொள்கைபோல் நாவியின்கட்போதருமதம்விடுத்துப் புன்மலங்கொள்ளுமாபோல்" என்று பிரபுலிங்கலீலையிற் சொல்லிய வண்ணம் நற்கதியை விரும்பவொட்டாமற் துற்கதியை யடையச்செய்கிற இந்த காமம் மனிதருக் கிருப்பது தருமமோ?

மற்ற எந்த விஷயத்தைப்பற்றி நினைத்தாலும் பிரபலமாகச் சித்திக்கிறதில்லை. இந்த காமமோவென்றால் நெஞ்சி லுதித்தமாத்திரம் (அசைவற்றிருந்த சமுத்திரமானது கொஞ்சம் அசைந்தவுடனே காற்றுமென்மேலும் வந்துவீசி அலைகளையெழுப்பி கரைமட்டும் புரட்டிக்கொண்டு வருகிறதுபோல்) அதற்குச் சளையமாகிய துர்நினைவெழுந்து தீயகுணங்களோடுகூடி அக்கிரமங்களிற் பிரவேசிக்கச்செய்து மானத்தைக் கெடுத்துவிடும்; அன்றியும் இந்த காமமானது ஊசிகாந்தக் கல்லைப் போலவும் துற்குணங்கள் இரும்பைப் போலவு மிருக்கின்றது.

இந்தகாமம் உதியாதபோது ஆபாசமாய்த் தோற்றிய கட்டிவங்கள் உதித்தபோது அதிகரூபலாவண்ணிய முடையதுபோலவும் சகலநன்மைகளும் இதிற்றானிருக்கிறது என்று நினைக்கும் படியாகவும் தோற்றி துற்கிருத்தியங்களிற்றள்ளிவிடும்.

இதைநன்றா யோசித்துப் பார்க்குங்கா

ல் இது நெஞ்சிலுதிப்பதே யன்றி, வேறேயிடத்திலிருந்து திடீலென்று வந்து விழுகிறதன்று. "காமம்வெகுளி மயக்க மிம்மூன்ற, னாமங் கெடக்கெடுநோய்" என்று குறளிற் கூறியவண்ணம் ஞானமாகிய ஒரு தீபத்தை மனிதருடைய நெஞ்சினிடத்திலேற்றிவைத்தால மோக விகாரமாகிய இருள் என்ன செய்யக்கூடும்.

இந்தக்காமத்தின் துன்மைமையைப் பற்றிப்பேசப்புகுந்தால் அளவற்ற விஷயங்களிருக்கின்றது. ஆனால் இது ஆபாசமாய்த்தோற்றினமையால் இம்மட்டும் நிறுத்தினேன்.

ஆகையால் மனிதரின் நெஞ்சகத்தில் அடர்ந்து வளர்கின்ற இந்தக்காமாந்த காரக் காட்டைப் புத்தியென்னும் வாளினல் வெட்டியெறிந்து, சாந்தமென்னும் எருப்போட்டு, அன்பாகிய நீரைப்பாய்ச்சி, ஞானமாகிய நெல்லைவிதைத்து, அஞ்ஞானக்களைக ளணுகாமல் ஜாக்கிருதையென்னும்காவலினற் பயிர்செய்து வளர்த்து, அந்தஞானதானியத்தை சான்றோர்களாகிய களத்திற்சேர்த்து, நற்சம்பாஷணைகளென்னும் எருதுகளால் தூம்படித்து, நன்னடக்கையென்னும் அளவையால் அளந்து, கடவுளாகிய முதலாளிக்கு அளவுப்படிக்கு குறைவில்லாமல் திருப்தியாகும்படி ஒப்புக்கொடுத்து, அவரால் வரும் அனுக்கிரகமாகிய கூலியைவாங்கிப்புசித்து, நாட்களைக்கடத்தி பின்பு முதலாளியின் பேரின்ப வீட்டை யடைந்து, ஆநந்தமாகிய லாபத்தை யனுபவிப்பது நன்மையென்று என்சிற்றறிவுக்குத் தோற்றுகின்றது. இதைமன்னிக்கக்கடவது.

பிரார்த்தனை.

படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிலையும் நடாத்தி அன்பர்களுக்கு இம்மையிலும்மறுமையிலும் இன்பத்தைக் கொடுத்து அனுக்கிரகஞ்செய்கின்ற ஒப்பற்ற கடவுளே! யாங்கள் புரிந்த தீமைகளை மன்னித்து உமது கருணைவிழியாற் பார்த்து எங்களுக்கு கல்வியும் ஞானமும் ஓங்கச்செய்து யெங்களையடிமைகொண்டு இந்தபூமியின்கண்சிறப்புடன்வாழச்செய்து இந்தசபையானதுஉம்முடையசபைபோல் ஓங்கிவிளங்க கருணைசெய்து முடிவில் உம்முடைய அளவில்லாதபதவியை யடையும்படி எங்களுக்கு அனுக்கிரகத்துடன் அருள்செய்யும்படி பிரார்த்திக்கிறேம்.

ம-ா-ா-தத்துவபோதினிகர்த்தர்களுக்கு

சோதரர்களே? நம்மதேசத்தாருக்குமிகுந்த க்ஷேமகரமான ஒருபிரயத்தனம் ரங்கநாதசாஸ்திரி யவர்களால் செய்யப்படுகிறதென்று கேள்விப்பட்டு, அதை நம்மவரனைவர்க்குந் தெரிவிக்க நான்விருப்பங்கொண்டிருக் கின்றமையால் நீங்கள்தயைசெய்துஇந்தச்சஞ்சிகையைஉங்கள்பத்திரிகையில் பிரசுரப்படுத்துவீர்களென்று கோருகிறேன்.

நமதுதேசத்தில் பாலுண்ணும் பெண்களுக்கு விவாகம்செய்வதினலும், பெண்களுக்குப் புனர்விவாகம் செய்யாமையினலும், விளைகின்ற அளவற்றதீமைகளை நேராய்க்கண்டும் கேட்டும் அனுபவித்துமிருப்பதினல், இத்தீமைகளை நிவர்த்திக்க மேற்கண்ட ரங்கநாதசாஸ்திரிகள் வெகுநாளாய் யோசித்திருந்ததாய்க் காண்கிறது. பிரகிருதத்தில் சங்கராசாரியர்மடம் இவ்விடம் வந்திருக்கின்றமையால் அந்த மடாதிபதியின் சகாயத்தால் அவர் இப்புகழ்பொருந்திய கோரிக்கையை நிறைவேற்ற யத்தனித்ததாய் கேள்விபடுகிறேன். இவர் பிரயத்தனத்தின் உத்தேசியம் என்னவெனில் பிரகிருதத்தில் நடந்தேறிவரும் பொம்மைக்கல்லியாணங்களை நிறுத்திவிட்டு பெண்களுக்கு வயதும் பகுத்தறிவும் வந்தபிறகு கல்லியாணம் செய்விக்கவேண்டுமென்பதுதான். இப்பால்நிஷ்பக்ஷபாதமாய் உரைக்கத்தக்க பண்டிதர்களை விசாரிக்குமளவில், இத்தன்மையான விவாஹத்துக்கு சாஸ்திரபாதகமில்லையென்றும், ஆகிலும், புதுமையானதாகையால் உலகத்தார் ஒப்பமாட்டார்களென்றும் விடையுரைத்தார்கள். லவுகிகயுக்திகளையோசிக்கையில் அளவற்றநன்மையளிக்கத்தக்க இக்காரியதுக்குச சாஸ்திரபாதகமும்இல்லாவிடில் அதையனு

சரிக்க என்னதடையுண்டோ என்னாலறியக்கூடவில்லை. கடவுளின் கிருபையினால் இக்காரியம் கைக்கூடிவருமெனில் இதற்காக முயற்சியும் ரங்கநாதசாஸ்திரியவர்களுடைய பேரும் பிரதிஷ்டையும் இந்த பூமியுள்ளளவாயில் நிலைத்திருக்குமென்பதில் சந்தேகமில்லை. அவருடைய உத்தேசியத்தை உள்ளூறசிலாகிக்கும் எனக்கு அவரனுசரிக்கும் மார்க்கத்தில் இரண்டொரு பழுதுகள் தோன்றுகின்றமையால் அதை எச்சரிப்பது நமது தேசத்தின் க்ஷேமத்திலுடன்பட்ட என்கடமையென நினைக்கிறேன்.

முதலாவது—இக்காரியம் சாதுவானதென்று ஸ்தாபிக்கும்பொருட்டு யாரோ ஒரு பண்டிதரைக்கொண்டு அவர் ஒருகிரந்தமெழுதி பிரசுரப் படுத்தியிருக்கிறார். சாதாரணமாய் ஸம்ஸ்கிருதத்தில் மாத்திரம் பாண்டித்தியம் பெற்றபண்டிதர்களைக்காட்டிலும் ஸம்ஸ்கிருதம், இங்கிலீஷு முதலிய பலபாஷைகளில் ஞானமடைந்திருக்கும் ரங்கநாதசாஸ்திரிகளே அந்தக்கிரந்தத்தை எழுதியிருப்பாரெனில் அதின்மேல் ஒருகுற்றம்சொல்வதற்கு இடமிராது. கேவலம்ஸம்ஸ்கிருதத்தில் மாத்திரம் ஞானமுடையவர்கள் கிணத்துத்தவளைக்கு ஒப்பாவார்களாகையால் அவர்களுடைய புத்திவிகாசத்துக்கு விசேஷஅவகாசமிராதல்லவா? ஒருவேளை நம்மதேசத்துப் பண்டிதர்கள் ஒருவர்தாக்ஷிணியத்தின்பொருட்டு அவர்கள் மனதிற்கு விரோதமானகாரியத்தைச் செய்யத்தொடங்கினாலும் அதைத் தாமாய்செய்தால எவ்வளவுநன்றாயிருக்குமோ அவ்வளவுநன்றாய் செய்யமாட்டார்களென்பது நிச்சயம். இப்புஸ்தகத்தை இயற்றிய பண்டிதர் அதை அரைமனதுடன் செய்ததாய்நினைக்கவேண்டியிருக்கிறது. ஏனெனில் பிரமாணங்களுக்குப் பிரத்தியக்ஷமாயும் ஸ்பஷ்டமாயுமுள்ள அர்த்தங்களைமட்டும்விட்டு கோணலானால் சாதாரண ஜனங்கள் அந்தபுஸ்தகத்தையேகவுரவிக்காமல்போகும்படி நேரிடுமல்லவா? ஆகிலும் இந்த புஸ்தகம் சுத்தஸம்ஸ்கிருதத்தில் செய்யப்பட்டிருக்கின்றமையால் அதைப் பார்க்கும் பண்டிதர்களுக்கு அதில் யாதொரு குற்றமும் தோன்றாதாகிலும் அதை தமிழ்தெலுங்குகளில் பிரசுரப்படுத்தும்போது ரங்கநாதசாஸ்திரிகளே சுவயமாயாவது அல்லது இங்கிலீஷிலும் ஸம்ஸ்கிருதத்திலும் விசேஷபாண்டித்தியம்பெற்ற இதரரைக்கொண்டாவது அதை முடிப்பாரெனக் கோருகிறோம்.

இரண்டாவது—இத்தன்மையான காரியங்கள் மடாதிபதிகளின் சகாயத்தால் முடியுமென்றுநினைத்ததுஎனக்குச்சரியாகத் தோன்றவில்லை. உலகத்தில்ஜனங்கள் அவரவரிச்சைப்படி நடக்கக்கூடுமாகிலும் மடாதிபதிகள் அனைவருடைய இஷ்டத்தையும் எதிர்பார்க்க வேண்டியவர்களாயிருக்கின்றமையால் இத்தன்மையான சாஹஸகாரியங்களை முடிப்பதற்கு ஆவசியகமான தைரியமும் துணிவும் அவர்களிடத்தில் இருக்கமாட்டாதென்பது அனைவருக்கும் தெரிந்தவிஷயம். ஆகையால் கக்ஷியாவேசமாயன்றி உண்மையானதர்மசிந்தையுடன் ரங்கநாதசாஸ்திரியவர்கள் இவ்விஷயத்தைப் பல பாஷைகளிலுமெழுதிநம்மவரனைவருக்கும் எட்டும்படிச்செய்து அவர்கள்துரபிமானத்தைப்போக்கி, ஸ்வானுஷ்டானத்தினாலாவது அல்லது அதற்கவகாசமில்லாவிடில் அவரைப்போன்ற உன்னதபதவியிலுள்ள பலரைக்கொண்டு அனுஷ்டித்தாவது முடிப்பாரெனில் காரியம் கைக்கூடிவருமென்பதில் சந்தேகமில்லை. அப்போதும் பாமரர் நிந்திப்பார்கள். ஆகிலும் சுவற்பகாலத்துக்குள் அப்படி நிந்திக்கும்பாமரரே அதின்பயனை யறிந்துகொண்டு அனுஷ்டிக்கத்தொடங்குவார்களென்பதற்குப் பலதிருஷ்டாந்தங்களை எடுத்துரைக்கக் கூடுமாகிலும் இடசங்கோஜத்தினால் அப்படிசெய்யவில்லை.

இவ்விஷயத்தில் நான் எச்சரித்தசங்கதிகள்சரியானவையென்று ரங்கநாதசாஸ்திரியாரவர்கள் கிரஹித்து அவலம்பிப்பார்களெனில் நான் அளவற்ற சந்துஷ்டியடைவேன். ஒருவேளை அவற்றையவர் அங்கீகாரத்துக்கு யோக்கியமில்லையென்று கிரகித்த போதிலும்இந்தச் சஞ்சிகையை நான்விரோதத்தால் எழுதினதாகக் கொள்ளாரெனில் அதுவேஎனக்கு பரமப்பி

ரயோஜனமென மதிப்பேன். இதைக்குறித்து சிலபிரஸ்தாபம்செய்ய உங்களுக்கிசையுமாகில் நான்என்றென்றும் உங்கட்குக் கடமைப்பட்டிருப்பேன்.

இப்படிக்கு

உங்கள்விதேயன்

நலங்கோருவோன்.

காளீகட்டநகரத்தின் பிரும்மஸமாஜத்தாரால் வங்கபாஷையில் பிரசுரமாகிவருகிற தத்துவபோதினியினின்று மொழிமெயர்ப்பு.

சென்னைநகர்வேதஸமாஜம்.

ஒருவருடத்திற்குமுன்னர், ஸ்ரீயுக்தகேசவசந்திர பிரமாநந்தர் (பாபுகேவசந்திரசேனர்) சென்னைக்குச்சென்று, அவ்விடத்தில் இரண்டொரு உபநியாசங்கள்செய்தனர். அவருடையசெய்கையும், உபநியாசமும்நிரர்த்தகமாகவில்லை. அவருடைய செயர்க்கையாலும் ஆலாபத்தாலும் அங்குள்ளயுவர்களினதுமனதில் தருமஸாஹஸம் பிரகாசமாயிற்று. அவாள்காலதாமஸமின்றியே சென்னையில் வேதஸமாஜ மென்று ஒரு ஸமாஜத்தை ஸ்தாபித்தார்கள்; அதினின்று தத்துவபோதினி என ஒருபத்திரிகை மாசந்தோறும் பிரகாசமாக ஆரம்பமாயிற்று. நாம் அதின்துவாதச ஸங்கியைகளைக் கைப்பற்றினோம்.

சென்னைப்பிரதேசத்தில் பிராம்மணபண்டிதர்களுடைய தர்மதத்தைக்கண்டிக்கிறநிமித்தம்மத்தியில் ஒருபுத்தகம்பிரசுரஞ்செய்யப்பட்டது. அதில் ஒருகண்டம்நாம் அடைந்தோம். துடுக்கின்றி தேசீய்ய சாந்தபாவத்துடன் பிரும்மதரும்மப்பிரசாரஞ் செய்து தருமத்தையே முக்கியமாகக் கொண்டவர்களாகிய ஹிந்து தேசஸ்தர்களுடைய கண்களைத் திறக்கச்செய்யவேண்டுமென்பது அவர்களினது இச்சை; அதின்பொருட்டு அவர்கள் ஸம்ஸ்கிருதபாஷையின் விசேஷபிரசலாகத்துடன் தருமபாவத்தை பிரசுரஞ்செய்ய யத்தினஞ்செய்கின்றனர்; அதற்காகவே பாலவியாகரணமென ஒருஸம்ஸ்கிருதவியாகரணத்தை திரவிடபாஷயில் அச்சிட்டனர்; அதில் ஒன்றுகாளீகட்டபிரும்மஸமாஜத்திற்குக்கொடுபட்டது. வடக்கே ஆந்திரப்பிரதேசம், தெர்க்கே திராவிடப்பிரதேசம், இதின் ஸந்தியில் சென்னைநகர் இருக்கின்றது; ஆனதால் சென்னையில் பிரும்மதருமம் விருத்திஅடையஅடைய ஆந்திரத்திரா விடங்களாகிய இரண்டுப்பிரதேசங்களிலும் தர்மமோங்கி விருத்தியாகும். ஆனதால்காலவிளம்பமின்றி எடுத்தகாரியம்முடிவுபெறுமென்று தோற்றுகிறது.

சுவல்பதினத்திற்குமுன் சென்னைப்பிரதேசத்தினின்று ஸ்ரீயுக்த, செ. ஸ்ரீதரஸ்வாமி(துரைசாமி) நாயகர்பிரும்மதரும, மதவிசுவாசங்களை அறிதலின்பொருட்டு காளீகட்டநகர் பிரும்மஸமாஜத்திற்கு வந்தனர். அவர் இப்போது நமதுஸமீபத்திலிருந்துகொண்டு ஸம்ஸ்கிருத வங்கபாஷைகளுடன் பிரும்மதருமாத்தியயனஞ்செய்கின்றார். பிரதான ஆசாரியரவர்கள் விசேஷப்பிரீதியுடன் அவருக்குவேண்டிய சகாயஞ்செய்து வருகின்றனர். அவர் அத்தியனஞ்செய்கிற பரிசிரமத்தையும் அத்தியவசாயத்தையும் பார்க்கின் பிரும்ம தருமத்தின் மர்மத்தை யுணர்ந்தபின்னர் ஸ்வப்பிரதேசஞ்சென்று பிரசாரஞ்செய்வாரெனத் தோன்றுகிறது. ஈசுவரப்பிரசாதத்தால் நம்முடைய சென்னைப்பிரதேசத்தில் காலவிளம்பமின்றியே பிரும்மதருமதேஜஸ்ஸு வியாபிக்கப்பார்ப்போம்.

அங்குள்ள கிரிஸ்துமிஷனேரிகள் வேதஸமாஜத்திற்கு விபக்ஷமாய் ஸத்தியவேதஸமாஜமென்று பெயரிட்டு ஒருஸபையை ஸ்தாபித்தார்கள். ஸத்தியவேதஸமாஜத்திற்கு விபக்ஷமாய் வேதஸமாஜத்தார் இருமடங்கு உச்சாகத்துடன் தங்கள்காரியங்களை ஸாதித்துவருகின்றனர். மிஷனேரிகள் பாமரருக்குமோஹமுண்டாக்கவும் அவர்களுடைய பிரீதியை ஆகர்ஷிக்கவும் ஏதுவாக "பைபில்" சப்தத்தைமாற்றி "வேத" சப்தத்தைப் பிரயோகித்து, கேவலம் இந்தலகுத்துவத்தினால் பைபில்விஷயமாய் அகிருதக்கியதையை வெளியாக்கினர்; இதுவுமன்றி நம்முடைய பிரும்ம தருமத்திலிருந்து "ஸத்ய மேவஜயதே" என்கிறவேதவாக்கியத்தைக் கிரஹித்துதங்களுடைய "ஸத்தியத்துவஜம்" என்னும் ஒருமாஸிகபத்திரிகைக்கு சிரோபூஷணமாகச் சூட்டினர். அவாள் கிரஹித்த சுருதி பயனடையவேண்டுமென ஈசுவரனைப்பிரார்திக்கின்றனம்.

நமதுசென்னை வேதஸமாஜத்தால் பிரசுரமாகிற ஒரு தத்துவபோதினி பத்திரிகையினின்று இதனடியில் பிரதர்சிக்கப்படுகிறகாணம் கிரகிக்கப்பட்டது. அதின்மூலமாய் பிரும்மகணம் சென்னைபுரியில் பிரும்ம தருமத்தின் நூதன பிரவேசத்தைக் கண்டு களிகொள்ளக்கடவது.

த்யாஜ்யம்தவ. (இத்தியாதிகள்.)

காலக்ஷேபம்.

நமது வாழ்நாட்கள் சிறிதென்று முறையிடுகிறோமல்லவா? இன்னதுசெய்யவேண்டுமென்று தெரியாமல் வீணாய்க் கழிக்குங் காலத்தை யோசிக்குமிடத்தில் நமது வாழ்நாட்களைப் பெரிதென்றே கொள்ளவேண்டும். யாதொன்றுஞ் செய்யாமலும், வீண்காரியங்களைச்செய்தும், நமதுகடமையானவைகளைச் செய்யாமலுமிருந்துக்கொண்டு, வாழ்நாள் சிறிதென்று முறையிட்டபோதிலும், நமதுசெய்கைகளால் கோடிகால மிருப்பவர்கள்போல நடக்கிறோம். இவ்வாறேமனிதர்கள் சொல்வதொன்றும் செய்வதுவேறுமாயிருக்கின்றது. வாழ்நாள்சிறிதென்று கவலையுற்றபோதிலும், காலத்தைப்போக்கி விடவும் விரும்புகிறோமல்லவா? ஒருவன் வாலிபனாயிருக்கும்போது சீக்கிரத்தில்மனிதனாகவும், மனிதனானபின்பு தொழிலிற்பிரவேசிக்கவும், பின்பு சம்பத்தையடையவும், அதன்பின்பு கௌரதைமுதலான மேன்பாட்டைப் பெறவும், இச்சுகங்களை யெல்லா மனுபவித்ததன்மேல் இவைகளைவிட்டு நீங்கவும் விருப்பமுடையவனாயிருக்கிறான். உயிர்வாழ்நாள் சிறிதெனக் கொள்ளப்பட்டிருப்பினும், அதன்பலபருவங்களி லொவ்வொன்றும் நீடித்திருப்பதாயும் ஓய்வற்றதாயுங் காணப்படுகின்றது. பொதுவில்மனிதர்கள் நெடுநாள்வாழ் விருப்பமுடையவர்க ளாயினும் ஒவ்வொரு பருவமும் சீக்கிரத்தில்முடியவேண்டுமென்று இச்சிக்கிறார்கள். தங்களுக்குச் சேரவேண்டியகடனுக்காக வியாச்சியஞ் செய்திருப்பவர்கள் விசாரணைகாலத்திற்கு முந்திய நாட்கள் சீக்கிரத்தில்போய்விடவேண்டுமென்று ஆவலுள்ளவர்களா யிருக்கிறார்கள். மணம்புரிவோன் தன்மனையாளோடு சேர்ந்து வாழும்படி நியமிக்கப் பட்டநாளுக்கு முந்திய நாட்கள் நொடியிற் போகவில்லையென்று சஞ்சலப்படுவான். காலம் எவ்வளவு சீக்கிரத்தில் போய்விட்டாலும் இன்னும் சீக்கிரத்தில் போய்விடாதா வென்று சந்தோஷப்படுகிறார்கள். இவ்வாறு சிலநாளைக் கழிக்க விரும்புவதுபோல் அனேகவருஷங்களையும் போக்கவிரும்புவோம். பாலைவனத்தில் செல்லுமொருவன் அதைவிட்டுநீங்கி மருதநிலத்திற் செல்லவிரும்புவது போல, தனக்குச்சுகங்கிடைப்பதாய்த் தோன்றுங்காலத்திற்கு முந்தியநாட்களைக் கழிக்கவிரும்புகிறோம்.

ஒருவனுடைய ஆயுள் நாளை இருபதுபங்காகப்பிரித்தால் அதில் பத்தொன்பது பங்கும் யாதொன்றுஞ் செய்யாமல் அல்லது சுகமேயில்லாமற்போக்கியதாய்க் காணப்படும். இது காலத்தைக் கிரமமாய்ப் போக்காதவர்களைப்பற்றியேயல்லாமல், காலத்தினுபயோகத்தை யறிந்து யாதேனு மோர்தொழிலில் கையிட்டிருப்பவர்கள் விஷயத்திலல்ல. வீணில் காலங்கழிப்பவர்கள், அப்படிச்செய்யாமல் காலத்தைக்கிரமமாய்ப் போக்கும்படி அடியில்சொல்லப்பட்ட மார்க்கங்களை உபயோகிப்பார்களென்று நம்புகிறோம். யாவராலும் நன்மையென்று கொள்ளப்பட்டநற்செய்கைகளைச் செய்தலும், ஜனங்களின் ஐக்கியவாழ்க்கைக் கேதுவானவைகளைச்செய்தலும், காலங்கழிப்பதற்குள்ள பலமார்க்கங்களுள்ளுஞ் சிறந்தவை. மூடர்களுக்குப்புத்திசொல்லிதிருத்துதல், வறியவர்களுக்குதவிசெய்தல், துன்பமுற்றவர்களைத் தேறுதலைசெய்தல், இன்னுமிவைபோன்றவைகள் இஷ்டமுள்ளயாவரும் செய்யவேண்டியகடமைகள். மூர்க்கரைச்சாந்தப்படுத்துவதும், பாத்திரமறிந்துதவிசெய்வதும், பொறுமைகுணமுடையவர்களை யதினின்றுமாற்றுவதும்கோபியைக்கோபத்தினின்றுத்தணிப்பதும், தூரபிமானமுள்ளவர்களைத் திருத்துவதும், விவேகத்திற் கடுத்தவைகளாயிருப்பதுமன்றி, இவைகளைப்புத்தியோடு செய்துவருபவர்களுக்குத் திருப்தியை யுண்டுபண்ணத் தக்கவைகளாயிருக்கின்றன. பேச்சுத்துணையின்றித் தனித்திருக்குங் காலத்திலுஞ் செய்யக்கூடியதொன்றுண்டு. அதாவது நம்மைப்படைத்த கடவுளுக்குத் துதிசெலுத்துதல். கடவுளெங்கும் வியாபித்து நமது செய்கைகளையும் நினைவுகளையுமறிகிறாரென்பதை எப்போதும் மனதிலெண்ணிநடப்பவர்கள் மனமகிழ்ச்சி யுடையவர்களாயிருப்பதுமன்றி, உயிருக்குயிரான சிநேகிதரிலுஞ் சிறந்தவராகிய கடவுளோடு கூடியிருப்பதாகியஆனந்தத்தில் மூழ்கியிருப்பார்கள். இவ்வாறு நடப்பவர்களுக்குக்காலம்போக்க வருத்தந்தோன்றாது. தனித்திருக்குங்காலமுமில்லை. தெய்வபக்தியில்லாதவர்கள் காலத்தைக்கழிக்க வழியில்லாமல் திகைத்திருக்கும்போது, தெய்வபக்தி யுள்ளவர்களோ அவஸ்தையின்றி, நல்லறம்பூண்டுவாழ்ந்திருப்பார்கள். மரணமடைந்தபின்பு தாங்கள்நாடியகடவுள்தங்களைக்கைவிடாரென்னும் நம்பிக்கையுடன் மறுமைப்பயனாகிய மோக்ஷத்தைநாடி அவர்கள் ஆத்துமாமகிழ்ச்சியடைந்திருக்கும்.

மனிதர் தாங்கள்செய்யும் நன்மைதீமைகளுக்கேற்ப மோக்ஷநரகங் கிடைக்குமென்பதைச் சிந்திக்குமளவில் இம்மையிலேயேகாலத்தைச் சன்மார்க்கத்திற் போக்கவேண்டுமென்பது தானாய்விளங்கும். மனிதனுக்கு விதித்திருக்கும் சிறிதுநாட்களைப்போக்கத்த

குதியானவழி யேற்பட்டிருந்தும் அந்நாட்களில் பெரும்பங்கையொன்றுஞ் செய்யாமற்போக்கியும், யாதாவது செய்வதாகிய சிறிதுகாலத்தைத் துன்மார்க்கத்தில் போக்குகிறவர்களை யென்னென்றுசொல்லுவோம். மனதையொன்றிலேயே நிறுத்திவைப்பது மிகவும் கடினமாகையால் குற்றமற்றவினோதங்களில் சிறிதுகாலம் போக்குவது அவசியந்தான். அப்படிசெய்வதிலும் அதிகஆனந்தத்தையளிக்கும் நல்லசினேகரோடு சம்பாஷணைசெய்வது மேலாம். சன்மார்க்கத்திலும் விவேகத்திலுஞ்சிறந்த நண்பருடன் கூடியிருப்பதிலு மதிகசந்தோஷத்தை யுண்டுபண்ணுவது, வேறொன்றில்லை. அவர்களுடைய நட்பு மனக்கவலையைநீக்கி, அறிவைவிளக்கி, ஞானமூட்டி, சன்மார்க்கத்தில் புத்தியை நிலைநிறுத்தி, பொறுமை, ஆசை, கோபம், கடுஞ்சொல்முதலிய வைகளைப்போக்கி, எக்காலத்திலுந் துணைநிற்கும். கல்விவிஷயத்தைஇவ்விடத்திலெழுதப்புகில், அது விசேஷமாய் முடியுமாகையால் கல்வியும் காலங்கழிப்பதற்குள்ளமார்க்கங்களில் ஒன்றென்று குறிப்பாய்ச்சொல்லிமுடிக்கலாயிற்று.

புஸ்தகவிளம்பரம்.

கிரந்தத்திலும், தமிழிலும் இயற்றப்பட்டபாலவியாகரணம்	0 - ச - 0
வேதஸமாஜத்தார் முதல் விண்ணப்பம் விக்கிரஹ ஆராதனத்தைக்குறித்தது, நன்றாய்ப்பயிண்டுசெய்தது......	0 - அ - 0
ஷை மட்ட பயின்டுள்ளது ...	0 - எ - 0
௧அ௱௬௨ ௵ மேமாசம் முதல் ௧அ௱௬௩ ௵ எப்பிரல்மீ வரையிலுள்ள தத்துவபோதினி பயிண்டுசெய்தது... ...	௩ - 0 - 0

வெளியிலுள்ளவர்கள் புஸ்தகம் ஒன்றுக்கு ஒரு அணாவீதம் தபால்கூலி சேர்த்தனுப்பவேண்டியது.

விளம்பரம்.

தமிழிலும், கிரந்தத்திலும், மணிப்பிரவாளமாய் குணுக்கரம்பாக்கம் - கோபாலாசாரியரால் அச்சிடப்பட்ட தனிசுலோகி முதல்சம்புடம் நேராய் வாங்குவோருக்கு பிரதி ஒன்றுக்கு விலை ரூபாய் - ௨. தபாலில் அனுப்பப்படும்பக்ஷத்தில் பிரதி யொன்றுக்கு தபால்கூலி அணா - ௨. பத்துபிரதிகளுக்கதிகம் வாங்குவோருக்குத் தபால் கூலியில்லாமல் அனுப்பப்படும்.

☞ இது தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் விற்கப்படுகிறது.

விளம்பரம்.

தத்துவபோதினிக்குக் கையொப்பம்செய்பவர்கள் அனுப்புந்தொகைச் சேர்ந்ததைக்குறித்து, உத்தரப் பிரத்தியுத்தரங்கள் வைத்துக்கொள்ள அனுகூலப்படவில்லை யாகையால், அந்தந்த மாதத்தில் வரும் கையொப்பங்களைக் குறித்து, மறுமாதம் தத்துவபோதினியில் ஒரு அட்டவணைப் பிரசுரம் செய்யப்படும். கடந்த மாதத்தில் வந்த சந்தாதாரர்களுக்கு அட்டவணை வருமாறு,

சந்தாதாரர்களுடைய அட்டவணை.

சென்னை -	இராஜரத்தினமுதலியார்......	௬
,,	இராகவாசாரியார்......	௧
,,	ஸ்ரீனிவாசாசாரியர்............	௧
,,	திருமலைராவு......	௧
,,	வரதராஜுலுநாயுடு............	௧
,,	தெய்வசிகாமணிபிள்ளை...	௧
காரைகால்-	சண்முகமுதலியார்...	௧
இராமேஸ்வரம்-	முத்துஇராமலிங்கபிள்ளை	௧
தஞ்சைநகரம் -	மாணிக்கப்பிள்ளை.........	௧
,,	நாராயணசாமிபிள்ளை...	௧
கூடலூர் -	முத்துசாமிமுதலியார்.......	௧0

பழமொழிகள்.

கடுகுசிறுத்தாலும் காரம்போகுமா.
கடைத்தேங்காயெடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தல்.
கட்டிவழிவிட்டால் வெட்டியரசாளலாம்.
கட்டினவீட்டிற்குக் கருத்துசொல்வார்கள்.
கட்டினவனுக்கொருவீடு கட்டாதவனுக்குபலவீடு.
கட்டைபாரையைவிழுங்கி சுக்குக்கஷாயம் குடிப்பதுபோல்.
கணக்கன்வீட்டுக் கலியாணம் விளக்கெண்ணெக்குக்கேடு.
கண்கெட்டபின்பு சூரியநமஸ்காரம் செய்தென்ன.

దేవస్తుతి.

రాగం - శంకరాభరణం - రూపకతాళం.

పల్లవి.

సత్యంజ్ఞానమనంతం - బ్రహ్మ - శాంతంశివమానందం.

అనుపల్లవి.

నిత్యంవిభుంసర్వ - గతంసుసూక్ష్మం
అత్యంతదీనాయ - పరమంనిధానం.................(సత్యం.)

చరణములు.

౧. ఏకోదేవస్సర్వ - భూతేషుగూఢః
సర్వవ్యాపీసర్వ - భూతాంతరాత్మా
కర్మాధ్యక్షస్సర్వ - భూతాధివాసః
సాక్షీచేతాకే - వలోనిర్గుణశ్చ ....(సత్యం.)

౨. అపాణిపాదోజ - వనోగ్రహీతా
పశ్యత్యచక్షుస్స - శృణోత్యకర్ణః
సవేత్తివేద్యన్న - చతస్యాస్తివేత్తా
తమాహురగ్ర్యంపు - రుషంమహాంతం...............(సత్యం.)

3. తేధ్యానయోగాను - గతాఅపశ్యన్
దేవాత్మశక్తింస్వ - గుణైర్నిగూఢాం
యఃకారణానిని - ఖిలానితాని
కాలాత్మయుక్తా - న్యధితిష్ఠత్యేకః.................(సత్యం.)

தனியான, ஒப்பற்ற, மெய்யறிவனந்த பிரும்மம், சாந்திபூர்ணம், அமிருதம், அதுஉருவும்குற்றமுமற்றது. இதையறிந்தவர்அமிருதராவார்; மற்றவர்துக்கமேயடைவார்.

மெய்யேவெல்லும், பொய்யல்ல.

சென்னப்பட்டணம்,—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணி முதலியாரால் பதிப்பிக்கப்பட்டது.